[illegible]

V. 1. No. 47 22 NOV 1928

SL
ஊ211, N28K4
N28·1·4.
189080.

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3

# கலாநிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஆம் நவம்பர்மீ 22உ [No. 47.

OF THE REGISTRAR OF ... 20 SEP 1929 MADRAS

பொருளடக்கம்.

| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 921 | 5. | கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L. | 930 |
| 2. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. | 923 | 6. | தமிழ்ப் பாடம். | 932 |
| 3. | காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L. | 926 | 7. | வானசாஸ்திரம் | 934 |
| 4. | உமார் கயாம் என்பவர்தம் உறுதிமொழி K. இராஜகோபாலன் | 928 | 8. | ஆந்திர சர்வ கலாசாலை பட்டமளிப்பு விழா ஆசிரியர் ஸி. வி. ராமன் பிரசங்கம் | 935 |
| | | | 9. | ஸ்ரீ லஜபதிராய் | 936 |
| | | | 10. | வர்த்தமானம். | 939 |

## கலாநிலயம்.

### கடவுளிருப்பது காவியத்திலே.

"காவியங்களே உண்ணும் உணவும் பருகும் நீரும் உயிர்க்குங் காற்றுமாய் உலகெலாம் நலம்பெற வாழ்வது இயலும். மற்றவெல்லாம் மிகை" என்று நவசக்தி பத்திராதிபர் ஸ்ரீமான் கலியாணசுந்தரம் முதலியாரவர்கள் சில தினங்களுக்குமுன், 'கலைமகள்' என்னும் விடயத்தைப்பற்றிக் கலாநிலயக் கல்விக்கழகத்தில்செய்தவோர் உபந்நியாசத்தில் தன் திவ்வியவாக்கினால் செப்பினார். கல்வியிலும் அறிவிலும் உலக அநுபவத்திலும் சிறந்து விளங்கும் அன்னார் இவ்வுண்மையைக் கண்டதெவ்வாறு என்று யாவரும் வியப்படையார். ஆயினும், காவியங்களைக் கடைவாயில் நிறுத்திக் கைக்காசிற்கு ஆதாரமானவைகளையே யாவரும் எங்கும் உள்ளழைத்துக் கட்டித்தழுவுவதுதான் கருமமென முழங்கித்திரியும் இந்நாளில் இவ்வாசகம் விளம்பத்துணிந்த அவர் வீரத்தைப் போற்றிப் பாராட்டுகின்றோம். ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தவிர இரண்டொருவருக்கு ஆங்காங்கு இவ்வுணர்ச்சி இருக்கலாம். இருப்பினும் இதனைக் கூறின் யாவரும் 'பண்டைநாள் மதியிலிப் பண்டிதன்" என்று தம்மை எள்ளி இகழ்வரோ என அஞ்சுவதால் அவர் கருத்துத் துஞ்சுமன் கண்ட கனவாகக் கழிகின்றது.

சென்ற மாதம் சென்னைச் சட்டசபையில் அண்ணாமலை பல்கலைச் சட்டம் நிறைவேறிய காலத்தில், வர்த்தக முறையும் ஒரு பாடமாகப் போதிக்க வேண்டுமென்பதைச் சட்டத்திற்குள் சேர்த்துக்கொள்ள வேண்டுமோ வேண்டாவோ என்னும் வாதம் வெகு வேகமாய் நடந்தது. வேண்டாவென்று எதிர்த்தார் சிலர். வேண்டுமென்று மன்றாடினார் அங்கத்தினர்களுள் ஒரு சாரார். வேண்டாவென்றவர்கள், வர்த்தகமுறை போதிக்க வேண்டுமானால் அதற்கு இச்சட்டத்தில் வசதியிருப்பதால் 'வர்த்தகம்' என்ற சொல்லை மீண்டும் சேர்க்கின்ற அவசியமில்லையென்றும், சிதம்பரம் வர்த்தகமுறை போதிப்பதற்கு எற்றவிடமன்றென்றும், இச்சர்வகலாசாலையை நிறுவுதற்கு எண்ணரிய நன்கொடை அளித்தவர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களது நோக்கத்திற்கு இது மாறாக இருக்கலாம் என்றும், இன்னபல காரணங்கள் காட்டினார்களேயன்றிக் காவியக்கலை பயிற்றுவது ஒன்றே சர்வகலாசாலையின் முதலும் முடிவுமாய கருமமாயிருத்தல்வேண்டுமென்றேனும், தெய்வப் புலமையோர் கற்பிக்கும் திப்பிய உலகத்தில் திப்பிய ஜனங்களோடு அன்னார் சீரிய கூரிய தீஞ்சொல் உதவிகொண்டு பயில்வதல்லால் பிறவியால் மாந்தர்பெறும் பேறு பிற இலவாதலால் அதனைத்தவிரச் சர்வகலாசாலையில் வேறெதற்கும் இடந்தரப்படாதென்றேனும் செப்புதற் கறிந்திலரோ இசைந்திலரோ, யாம் அறியோம். வர்த்தகமும் கைத்தொழிலும் இல்லாது எவரும் வாழ்வதற்கியலாதென்னும் கருத்து இத்திறத்தோர் மனதிலும் மூண்டிருண்டிருந்ததென்றே அவர் மொழிந்த சொற்களிலிருந்து நினைக்க நேர்கின்றது. இருப்பினும், நம் சட்டசபை அங்கத்தினர்களில் இத்திறத்தோர், காவியங்களைக் கற்பதால் தீதொன்று உளதென்று கூறவில்லை. அத்துணைப் பரிவிற்குமே நாம் நன்றி நனி காட்ட வேண்டியவர்களாயிருத்தல்வேண்டுமென்பதற்கையமில்லை. ஏனெனில், வர்த்தகம் ஒரு பாடமாகப் போதிக்கப் பெறாவிடின் இச்சர்வகலாசாலையால் பயனில்லை என்று பேசியவர் பேச்சினை யாரிடத்து உரை செய்து ஆறுவோம்! தமிழிலும் வடமொழியிலும் பண்டிதர்கள் மலிந்து கிடக்கின்றார்களாம். இருபதும் இரு

பத்தைந்தும் ஊதியமென்றால் கும்பிட்டு நிற்கும் பண்டிதர்கள் கொள்ளையிற்கிடக்க, இருநூற்றைம்பது முந்நூறு கொடுத்தாலும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு ஆள்கள் அகப்படுவது கஷ்டமா யிருக்கின்றதாம். ஒருவருக்குக் கலைகளெல்லாம் தெவுட்டிப் போய் விட்டதாம். ஆகையால் வர்த்தகத் தொழில் பயிற்றி இச்சர்வகலா சாலை பட்டங்கொடுத்துப் பலபேர்களுக்குப் பயன் உண்டாக்க வேண்டுமாம். அப்படியிருக்க, "இப்பண்டிதர்களை மேன்மேலும் பெருக்கிவிட்டு நம் குடிகெடுக்கப் பார்க்கின்றீரோ" என்று இத்திறத்தினோர் மறுதிறத்தினோரைப் பார்த்துச் சட்டசபையில் வினவினர். பாரதியார் பாடல்களைப்பற்றித் தனக்கொன்றுந் தகவலில்லை எனக் கழறிய அரசோடு அமைந்த அங்கத்தினர் வேறு யாது செய்வர்!

வர்த்தகமும் கைத்தொழிலும், இவைகளுக்குச் சார்பான தனுதாய சாத்திரங்களும் யாவரும் கற்றல் எத்தூரம் அவசியம் என்பதைப்பற்றி ஆராய்வது இச்சமயம் எமது கருத்தன்று. ஆங்கிலப்பேரறிஞர் கார்லைல், ரஸ்கின் போன்ற உத்தமர்கள், அவைகளைச் 'சொல்லாமல் கொல்கின்ற சாத்திரங்கள்' என்று கூறுவார். சொல்லாமல் கொல்வது தருமந்தான் என்ற கொள்கையினோர்க்கு இந்தச் சாஸ்திர அறிவு அத்தனையும் இன்றியமையாததே. மற்றுக் கொல்லப் புகுவோனே அதனிற் சிக்கிச் சாவதும் பலபோது நேர்கின்றது. எவ்வாறாயினும் ஆகுக. இச்சாத்திர அறிவினால் ஜனங்களுக்கும் பொருள் ஈட்டும் முயற்சியில் பயனுண்டு என்றே வைத்துக்கொள்வோம். கலாசாலைக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்! வாழ்க்கையை அழகும் இனிமையுமாய்க் கனிந்தொழுக வைப்பது கலாசாலை. அதற்குள் கொண்டு போய் இலாபநஷ்ட மென்னும் அபச்வரத்தை எழுப்புவானேன். பொன்னணியும் மணியாரமும் தவளமும் பவளமும் நல்லாடையும் மணமகட்கு நல்குவாரல்லாது, மனைக்கு வேண்டியது என்று அலகும் சுளகும் சீர்தனமாய்க் கொடுப்பா ருளரோ!

பொருளை ஈட்டுதற்குக் கற்குமுன், இருக்கின்ற பொருளை மற்றவர்க்குக் கொடுக்கக் கற்போம். இதுவே வரன்முறை வழுவாச் செய்கை. "இந்தியாவில் வறுமை அதிகமா யிருக்கின்றது. யாவரும் சதுரமாகச் சாப்பிடும் வகை (Square meal) செய்துவைக்க வேண்டியதே நமது முதற்கடன். ஆதலால், வர்த்தக முறைகளைச் சர்வகலாசாலையில் போதிக்கவேண்டும்" என்று சட்டசபை அங்கத்தினர் ஒருவர் எடுத்துப்பேசினர். வர்த்தகம் வளர்ந்தோங்கும் இங்கிலாந்திலும் அமரிக்காவிலும் எல்லாரும் என்றைக்கும் சதுரமாகத்தான் சாப்பிட்டுக்கொண் டிருக்கின்றார்கள் என்பது அவர் கருத்தோ! ஏழைகளைக் காட்டிக்காட்டி வர்த்தகமும் கைத்தொழிலும் பல செய்து அவர்களுக்குச் சதுரச் சாப்பாடு வழங்குவதெல்லாம், முதலாளிகளின் பாங்கிக் கணக்கில் வட்டங்கள் மேன்மேலும் வளர்ந்துகொண்டு போவதல்லால் வேறெவ்வகையிலும் எந்நாட்டிலும் எக்காலத்திலும முடிந்ததில்லை. சிதம்பரத்திலே அண்ணாமலைச் சர்வகலாசாலையிலே வர்த்தகத்தைப் பாடமாக வைத்து, அதனை மாணுக்கர் கற்றுத்தேர்ந்து, அதனால் நம் நாட்டின் வர்த்தகம் வளர்ந்து செல்வம் பெருகி ஏழைகளின் ஒட்டிய வயிறு சதுரமாவதற்கு எப்படியும் சில ஆண்டுகள் செல்லும். விஞ்சிய பொருள் உடையோர்யாவரும் உவந்து அவர்க்கு நல்கினரெனின் இன்றைக்கே யாவர் வயிறும் நிறையுமே. அளவற்ற நிலம் வைத்திருப்போர் பகிர்ந்ததை ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டால் நிறையாதோ அவர் குடல். "என்ன அறியாமையால் இது பேசுகின்றீரும்," என்பார் சிலர். "இவ்விதஞ் செய்தால் இன்றைக்கு வயிறு நிறையுமானாலும் பின்னெல்லாம் வறுமையே பெருகும். இது தனுதாய விதிகளுக்கு விரோதம், விரோதம்" என்று வாய் புதைப்பர். ஆம், 'தன் கொள்கைக் கேற்கக் கழுதும் சாத்திரங்கள் எடுத்துப் பேசும்' என்றோர் பழமொழி ஆங்கிலத்தில் வழங்குவதுண்டு. மற்றை நாளைக் கடவுளின் கையில் அடைத்து இன்றைக்கு உன் கைப் பொருளை உதவினால் ஆகாதோ!

உலகடங்கலும் இவ்வாறு ஓர் அன்ன சத்திரமாக்க விழைகின்றோம் என்று கூறுவதற்கு நாணுகின்றோம் அல்லேம் ஆயினும், எம் கருத்து இங்கு அதுவன்று. ஈட்டுதற்குக் கற்பதெல்லாம் ஈவதற்கன்றாயின் அத்தொழில் இழுக்குடைத்து என்பதே கலாநிலயத்தின் முறைப்பாடு. அகப்பொருள் இலக்கணத்தில் நம் பண்டைத்தமிழராய பெரியோர், 'பொருள் வயின் பிரிவு' என்றோர் பிரிவு வைத்தனர். காதலியை மணம்புரிந்து இல்லறம் புகுந்த தலைமகன் தன் உயிரனைய மனையாளை விட்டேகிப் பொருள்தேடப் போகுங்கால் எங்கோக்கத்தோடு அவன் பொருளை நாடுகின்றானென்பதை நல்லந்துவனார் கலித்தொகையின் முதற்பாட்டிலேயே கேட்பவர் மனம் கல்லேயாயினும் கரையும்படி பாடுகின்றார். "கையில் பொருள் இல்லாததால் அன்றோ இரப்பவர்க்கொன்று கொடுப்பதற்கியலாமல் தாழ்மை அடைகின்றேன்... ஆதலால் பொருள்தேட, என் னுயிரைய மனையாளையும் தனியேவிட்டுப் போவேன்" என்று துணிந்தனன். தனுதாயவிதிகளையும் வர்த்தகமுறைகளையுங் கற்றுப் பொருள் வளர்க்க வாதிப்போர் யாவரும் இத்தலைமகனைப்போல் 'பிறர்க்குக் கொடுக்கும் பொருட்டே ஈட்டுகின்றோம், ஈட்டச் சொல்கின்றோம்' என்று தம் நெஞ்சிலே கைவைத்து விளம்புவாராயின் பிறகு அவர்பால் எமக்கு இகலில்லை. பாவம், வைத்துப் பார்த்தார்களானால் அந்நெஞ்சு பகீரெனப் படபடக்கும்.

கடவுளிருப்பது காவியங்களிலே. பொருள் ஈட்டுமுன் அதனைக் கொடுக்கவேண்டும் என்னும் திப்பியக் கருத்தை, காவியங்கள் மூலமாய்ப் பிறப்பிக்க வேண்டிய தொழில், 'கலாசாலைகளுக்கு உரியது. இச்சர்வகலாசாலைக்கு இலக்ஷக் கணக்காய் மூலதனம் அளித்துப் பேருதவி புரிந்த ஸ்ரீமான். ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் இவ்விஷயத்தைப்பற்றி எவ்வகைக் கருத்துடையவ ரென்றறியும் அவா, சிலர்க்கு இருக்கலாம். திவான்பகதூர் R. N. ஆரோக்யசாமி முதலியார் அவர்கள் ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்களைச்சந்தித்துப் பேசியதாகச் சட்ட சபையில் சொல்லிய வார்த்தைகள் இவை:—

> "நான் ஸர். அண்ணாமலைச் செட்டியாரைச் சந்தித்து, அவருக்கோ, தொழில் படிப்பும் (Technology) வர்த்தகமும் சேர்த்துக்கொள்வதில் ஆக்ஷேபனை இல்லை என்று கண்டுகொண்டேன். ஆனால், கலாசாலைப் படிப்பு இன்னும் அதிகம் முதிர்வது நமக்கு வேண்டா என்றும், அதைவிட தொழிற் கல்வியும் வர்த்தகமும் நாம் வளர்க்கவேண்டும் என்றும் ஓர் உணர்ச்சி இந்நாட்டில் இருக்கின்றது. இந்தச் சட்டசபைக்கு இது இருப்பது அவசியம் என்று தோன்றினால் அவருக்குச் சிறிதும் ஆக்ஷேபனை இல்லை என்று கூறினர்."

இவ்வாக்கியங்களின் அமைப்பிலிருந்து, "ஆனால்" என்பது முதல் "நாட்டில் இருக்கின்றது", என்பதுவரையில் இருக்கின்ற சொற்களில் அடங்கிய உணர்ச்சியைப் பற்றிய அபிப்பிராயம் ஸ்ரீமான். திவான்பகதூர் ஆரோக்கியசாமி முதலியார் அவர்களதே என்று எண்ணக் கூடியதாயிருப்பதால், ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் 'ஆக்ஷேபனை இல்லை' என்றமட்டில் செப்பினாரேனும் காலாசாலைக்குரியது காவியங்களும் மற்றக் கலைகளுமே எனக் கருத்துட் கொண்டவராதல் வேண்டும் என்றெண்ணி மகிழ்கின்றோம். இவ்வள்ளலார் வாழ்க.



# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்,

## பொருள் ஆராய்ச்சி.

[905-ம் பக்சத் தொடர்ச்சி]

### முடிந்தது முடித்தல்

### 1. திருக்காளத்திப் புராணம்

இறைவனிருந்த இடம் பேரின்பம் பெருக்கெடுக்கும் இடமன்றோ? வடவைபோல வெயில் காயினும் அவரிருந்த இடமோ, மாசில்வீணையும் வீங்கிளவேனிலும் வீசு தென்றலும் மாலைமதியமும் தவழும் மூசுவண்டறை பொய்கையும்போன்று குளுகுளுவென் றிருக்குமன்றோ. அதனை நன்கு விரித்துரைக்கின்றார் ஆனந்தக் கூத்தர்.

> செந்துணர் இளநறுத் துளிப்பத் தென்றலும்
> வந்துலா வக்குளிர் மருவி அந்தளிர்
> அந்தியிற் பொதுளிய அடவிக் கோட்டுறை
> சுந்தரக் கடவுளைத் தொழுது கண்டனன்.

என்று அவர் புகழ்தல் காண்க. இதனையும் சேக்கிழார் சொல்லாது விடவில்லை.

> "செங்கணே றுடையார் வைகும்
> திருமலைச் சாரற் சோலை"

என்று சேக்கிழார் பாடியதன் விரிவுரையே இப்பாடல் எனலாம். எனினும் இவ்வாறு விரித்துரைத்தமை இவரது பெருமையைப் பெருக்குகின்றது.

முன்னைய நல்வினையாலேயோ முக்கண்ணன் அருளாலேயே திண்ணனார் அருளுருவமானார் என்று கூறி, ஏழை வேடனையே இவ்வாறு செய்வாரானால் ஆண்டவன் அருளை எவ்வாறு புகழ்வதென நம்பியாண்டார் நம்பியோடு இறைவனை ஏத்துகின்றார் இந்நூலார். முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்ட (பெ. 102) அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கமெய்திப் பொருவிலன் புருவமானார். (பெ. 104) என்று சேக்கிழார் சிறப்பிக்கின்றதையே இவர் இவ்வாறு கூறுகின்றார். கண்டதும் காதல்கொண்டதைக் கருத்தில் அமைத்துக்கொண்டு "அவர் கண்டார். இவரும் கண்டார்" என்று சேக்கிழார் அன்பின் கதை சொல்லிப் போகின்றார். ஏழை வேடனென் றிகழவில்லை. ஆண்டவன் உயர்வை எண்ணி அருமை பாராட்டவில்லை. இந்நூலாசிரியரால் திண்ணனாரினும் திருவருள் சிறந்ததென்பது மறக்க முடியவில்லை. சேக்கிழாருக்கு வானவர் பெருமானும் வனவேடர் பெருமானும் ஒருவரேயாகிப் பெருமானுயினர். இவ்வொப்புமை கூறுவதால் அன்றோ அவர் கதை அன்பின் திருக்கதையாகி விளங்குகின்றது.

"திண்ணனார், கண்டதும் காந்தத் தூசிபோலப் பற்றிக்கொண்டனர்." என்று அவர் அன்பனுகிய நிலையை நன்கு உவமை வாயிலாக விளக்குகின்றார் ஆனந்தக் கூத்தர். கொண்டல் வானவில்லொடு மலைமேல் படிதல்போலத் திண்ணனார் வில்லொடும் மலைக் கொழுந்தைத் தழுவிக்குழைந்து வீழ்ந்தனர் என்று கச்சியப்பர் நாட்டுப் படலத்தில் கூறியதைப் பயன்படுத்திக் கொள்கின்றார். (கா. 31.) அன்பு நெக்குருகிக் கண்ணீரலை கொழித்துவீழ இன்பமோர் வடிவமாகி யாரையும் திரிந்து நோக்காது நின்றார் திண்ணனார். சேக்கிழார் அன்புருவமானார் என, இவர் இன்பமோர் வடிவமானார் என்கின்றார். திரிந்து நோக்கார் என்று கூறிய உடனேயே "நன்புனல் வார்த்துச் சீதப் பச்சிலை நயந்திட்டார், ஆர் சாற்றுதி" என்று வினவியதை எடுத்துரைக்கும்போது ஆனந்தக்கூத்தர் பாட்டில் முன்னுக்குப்பின் சிறிது முரண்பாடு தோன்றாமல் இல்லை. (கா. 32. பெ. 108.) முன் வேட்டையாடியபோது ஓர் பார்ப்பனன் நீருற்றிப் பச்சிலை இட்டான் என (கா. 33. பெ. 109.) நாணன் சொல்லியதும் சொல்லாததுமே "ஈதே எம்பெருமானுக்கு நல்லது, நானுமிவ்வாறு செய்வேன்" என உவகைபூத்துச் சற்றே நீங்கினர். "ஐயோ துணையின்று இறைவற்கு" என்று நெட்டுயிர்த்து விம்மி ஏங்கினர் (34. கா-110. பெ.) "சீறியும் பாய்ந்தும் திரியும் விலங்குள்ள காட்டில் தனியே துணையின்றி எல்லியும் கிராதர்போல இருந்தனை அந்தோ" என்று ஏங்கினர். (35. கா-107. பெ.) ஏங்கிய அந்நிலைக்கு, ஆனந்தக் கூத்தர் தம்மையும் அறியாது தமது கதையின் போக்கை வெளியிடும் ஓர் உவமை கண்டு,

> "புல்லுவன் தழலினூடே புணர்ந்திட்ட
> மெழுகு போன்றான்"

என்று புனைந்துரைக்கின்றார். இவ்வுவமை இடை யன்புக்கு எடுத்துக் காட்டுமோர் உவமை என்பது யாவரும் அறிந்ததொன்றே.

மேலே திண்ணனார் "இம்மலைப்புறத்தே வெயிலாலுணங்கி இத்தனை காலமா இருந்தார். வெம்மனக் கொடியேனுதலால் பொறுத்தேன். வேறு இது கண்டு எவர் தரிப்பார் அம்மா" என்று இரங்கி அழுதார். அழுதருத்தும் அருத்தியினால் நீங்கினர், என்கின்றார் கூத்தர். சோலைக்கு ளிருந்தமைகூறி இவர் இங்கு வெயில்பட நின்றமை கூறுவதில் சிறிது முரண்பாடுதான் தோன்றுகின்றது. இனி, நீங்கிய திண்ணனார் மீளுவர்; புனிற்றிளங்கன்று வேட்டு உயிர்மாளுமோர் ஆவென மறுகிச்சுழுவர்; எவர் காப்பர் என்று நோவர், பின் அமுது கொண்டுவா வேண்டுமே எனத் தேறி ஏகினர். முன் புலியாயிருந்தவர் கன்றினை நினைத்தழும் பசுவாய் விட்டார் என வற்புறுத்துவதோடு அந்நிலையிலும் ஆளரி யன்னவராய் நிற்றலையும் நினைப்பூட்டுகின்றார், இந்நூலார். (கா. 37. பெ. 112)

திண்ணனார் திரும்பியதும், காடன் "நல்விறைச்சி எல்லாம் அறுசுவைப் படுத்திவைத்தேன் விரைவினிற் றின்பார்" என்ன விடைகொடாது போயினர் என்கின்றார் நூலுடையார். சேக்கிழாரது காடன் தீ யொன்றே மூட்டினன். திண்ணர் தாமே முயன்று வக்குவித்தலை நமக்குக் காட்டவேண்டி அவ்வாறு கூறுகின்றார் அப்பெரியார். இப்பெரியாரோ அறுசுவைப் படுத்தும்வரை காடன் செய்ததாகக் கூறுகின்றார். அதுவுமன்றி "நாங்கள் தின்ன, நீ அருந்த" என்று உண்ணும் வகையை வேறுபடுத்திக் கூறிய நுட்பமும் இந்நூலில் இல்லை. மேலே நாணன் காடனுக்கு

> வரையினிற் றேவர்க் காளாய்க்
> மரபிகந் திட்டான் என்றான்.

(கா. 39. பெ. 115-116.) திண்ணனார் சுவையுள்ள புள்ளும் மாவும் பிடித்துவந்து கூரலகம்பினால் கொழுந்தரையீர்ந்து கொண்டுவந்தார். அழிபசியுற்ற ஆண்டவர்க்கு அன்று வேட்டையாடிய பன்றியே போதுமென விரைந்து சென்றார் திண்ணனார் என்கின்றார், சேக்கிழார். இந்நூலாரோ கூறிய சேக்கிழார்க்குமேல் ஒருபடி மேல் சென்று புள்ளும்கூறி அவற்றிற்காக அலைந்து திரிந்து அவற்றைப் பிடித்து வருவதாக எடுத்துச் சொல்லி வேட்டையை மாவும் புள்ளும் பிடிப்பதாகப் புனைந்துரைக்கின்றார். மேலும் திண்ண

னார் "பாரினில் வையார் கல்லை பண்ணி வைத்தார்" என்று அவாது அச்சத்தோடு ஆர்வஞ்சேர்ந்த புனித நிலையைப் புகழ்கின்றார் சேக்கிழார். அன்பன்றி ஒழுக்கத்துயர்வு கூறவில்லையே. காடன் மூட்டிய அனலும் ஊட்டிய சுவையும் போதா என்று திண்ணனாரை அனலுண்டாக்கச் செய்கின்றார் இந்நூலார். கோலிற் கோத்துக் காய்ச்சிக் குதட்டிச் சுவைத்தவற்றில் வாலியவற்றை ஒரு கல்லையில் வைக்கச்செய்கின்றார். ஈதெலாம் கண்டவர் பரிந்து "ஐயோ" என்று (40. கா-118. பெ.) "வயிற்றில் வெங்கனலுடற்றவும் வெதுப்பின இறைச்சியும் மிசைந்திடான் ; கொதித்திடும் எமக்கும் கொடான்; காடெலாம் எறிகின்றான்." என வருந்தி (41 கா-119. பெ.) "பேய் கொண்டுற்றான். நாகன் முன்போய் அறிவித்து வேலனோடு நண்ணியே இவன் பேய் தீர்த்து நாம் கொண்டு போவோம்" என எண்ணிப் போயினர். அவர்கள் போனதும் திண்ணனார் அறியார் (கா. 42-பெ. 120.)

கல்லையோ டொருகை யேந்திக் கான்மலர் தலையிலேந்தி வில்லொரு கரத்தி லேந்தி, விரைப்புனல் திருவாய் வந்தி, உறப்பசித்திருப்பார், என்று எல்லையிற் சென்று (கா. 43 . பெ 121,122) "எந்தாய் வாடினை பசியால்?" என்று சுந்தரச் செருப்புக் காலால் சோதியைக் குடுமிப் போதை உந்தினர். வாயினீரை யூற்றித் தம் முடிப்போ திட்டார் (கா. 44-பெ. 123-124.) அச்சத்தோடும் ஆர்வத்தோடும் பழுது புகாதபடி பாரினில் வையாது பரிந்தெடுத்து வந்ததை இங்கும் வற்புறுத்தி ஆனந்தக் கூத்தர் "பரிகலந் திருத்தி வைத்த பழுதில் ஊனமுது" என்று புகழ்கின்றார். சேக்கிழாரோ குதட்டிச் சுவை பார்த்ததனையே புகழ்கின்றார். இது நிற்க. ஊனமுதைத் திருமுன்பு வைத்து, "எற்றி வெதுப்பினன் பதம் பார்த்து, ஐய உண்" என்றேத்தி அருகிருந்து அருத்தினார் திண்ணனார். போதும் இருண்டது (கா. 45 - பெ. 124 - 125) "காரிருட் பிழம்புசூழ்ந்து கதுவவே, விலங்கு இவர் மேல் பேருறத் தினவு நீவும் — பின்னை என்செய்யுமோ" என்று ஓரிரு கண் மூடாது உலவினர் யாமம் எல்லாம். வில்லை வளைத்து நின்றார் என்று சொல்லவந்த இந்நூலார் வில்லெனும் படையைத் திகிரி எனும் படையாகத் திரித்தனர் என்ற பொருளும் குறிப்பால் தோன்றக் "கொடுமரந் திகிரியாக்கி" என்று ஓர் சொல்நயம்படக் கூறிப் போகின்றார். புலர்ந்ததும் எழுந்து பொன்னடிபோற்றிக் கதிரவன் எழுமுன் கானத்தமுத வேட்டைக்குப் போனார் புலவு கொப்புளிக்கும் வைவேற் புண்ணிய மூர்த்தியனார்." (கா. 47. பெ. 133.)

பலகலைத் துறைபோய் ஞானம் பரிணமித்தனைய நீரராகிய கோதிலாச் சிவகோசரமாமுனி, ஆதிநூல் முறைப்படி அண்ணலைப்போற்ற எப்போதும்போலப் பொருக்கென நண்ணினார். பேதமாகப் பிறங்கின கோட்டமே. (கா. 48. பெ. 135. 136.) சிறுகருந் தசையும் என்பும் செருப்படிச் சுவடும். ஞாளி நிறைதரு மடியும் மிச்சிற் கல்லையும் நிறைந்திருந்தன. மறையவர் "கெட்டேன்! யார் செய்தார்" என மனங்குன்றி "வேடுவர் எது செய்யவும் கூசார்" என்று எண்ணி, அவற்றை அலகிட்டோச்சிப் பொங்கு கோமயத்தினாலே எங்கணும் புனிதமாக்கிப் பொன்முகரியாடி மால்வரை ஏறிச் சென்றார். இங்கு இவ்வாறு ஆனந்தக் கூத்தர் கூறுகின்றவற்றில், கருந்தசைத் துண்டுகள் கண்டமையும், கோமயத்தினால் மெழுகியமையும் இவரே உண்மை கண்டு கூறியனவாதலின் போற்றத் தகுந்தவையேயாம். (கா.49-50 பெ. 137. 138) தூய்மையாக்க வேண்டியவற்றைச் செய்து, பொன்னடியை முறைப்படி போற்றினார். (கா. 51, 52. 53-பெ139.) சேக்கிழார் தனிமுதலாம் பரனென்று பன்முறையால் துணிந்த மறைமொழியாலே துதிசெய்து, என்று கூறுகின்றாராதலின், சிவகோசரியார் போற்றிப் புகழ்ந்ததை இரண்டு பாட்டால் விளக்குகின்றார் இந்நூலார். இதுநிற்க, மேலே சிவகோசரியார் பன்னகசாலையி னிறையும் புனிதமாதவர் குழாத்தினிலமைந்தனர். (கா. 54. பெ. 140.) ஆனந்தக் கூத்தரும் சிவகோசரியாரை அறிவுருவாகிய முனிவர் பெருமான் என்று முற்றி முடியப் புகழ்தல் போற்றத்தக்கது. பின்னரும், பழமுறை யமுதமூற் றெழுந்தொழுகும் பவள வாய்த் தவள முப்புரிநூல் அழகனும் சிவகோசர முனிவான் என்றும், யோகி என்றும் புகழ்கின்றார். நூன் முறைப்படி வழிபடுவதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

திண்ணனார், பன்றியும் முயலும் மற்றும் பறவையும் வேட்டையாடித் தீக்கடைக் கோலினாலே நெருப்புண்டாக்கி, வெதும்பிமென்று இரதம் பார்த்துப் பச்சைப் பரிகலத்தே உமிழ்ந்துமிழ்ந் தமுது தன்னைப் படைத்தபின், உத்தியானத்தமைந்த பொற்றகட்டுப் போதைப்பறித்து, அணிமுடியிற் சூடிக் கமழ்ந்த பொன்முகரி யாற்றில், புதுப்புனல் கனிவாய் மொண்டு, நிமிர்ந்த ஊனமு தேந்திச்சென்று முன் நின்றுகொண்டு, திருமுடிப்போதைத் தள்ளி மஞ்சனம் ஆட்டி, மலரும் சாத்தி, ஊனமுத மேற்றி,

அப்பனே உண்ணும் எங்கள்
அன்னையே உண்ணும் முத்தி
வைப்பெனும் திருக்கா ளத்தி
வள்ளலே உண்ணும் நன்றாய்த்
துய்ப்பதற் கான செந்தேன்
விரவிய சூட்டி றைச்சி
கைப்பதன் றுண்ணு மென்னக்
கரைந்தமு தருத்தி நின்றார்.

என்று புகழ்கின்றார் ஆனந்தக் கூத்தர். (கா. 55. 56. 57. 58. பெ. 148, 149 - 450.) தேனுமுடன் கலந்தது தித்திக்கும், என்று சேக்கிழார் கூறுகின்றது மிகச் சுவையுள்ள இடமாகும். அதனைவிட்டு இது கைக்காது என்று கூறுவது எதுகை நோக்கி எழுந்த சிறுபிள்ளைப் பேச்சேயாயினும் "சுடச்சுட இருக்கின்றது அம்மையே அப்பா உண்" என இந்நூலார் எடுத்துரைத்தமை இவர் வாயுணர்வின் வல்ல புலவர் என்பதை நமக்குக் கோள்சொல்லி விடுகின்றது.

திரும்பிப்போன நாணன், நாகன்முன் சென்று "விலங்கெலாம் கருவறுத்துப் பெருஞ்சுனை நீர் விளைவிக் காளத்திப் பிறங்கல் எய்திக் குடுமித்தேவன் சார்மலி போய் கண்டு ஊணும் உறக்கமுந் தணந்து போனான். வீட்டை நினைக்கிலன், வேறொருவரை நோக்கிலன் நம் திண்ணன்" என்றான். நாகனோ செந்தழலொழுகக் காய்ந்த மயநெடுஞ் சலாகை காதிற் பாய்ந்தென மயங்கினான். அயலவர்க்கூவி "யார் செய்தமாயமோ" என்று கானத்தி மலைக்குச் சடிதியிற்போனான். திண்ணனாரைக் கைநெருமுங்கப் புல்ல அவர் விடைகொடா துதறினார். இந்த நிலையில் ஆனந்தக் கூத்தருக்கு மார்க்கண்டன், கூற்றுவன் இழுத்தபோது குரைகழலைத் தழுவியது மனதிற்கு வருகின்றதுபோலும். திண்ணனார் கடவுளது தாளைப் பற்றிக்கொண்டார் என்கின்றார். பின் நாகன் முதலாயினோர் கைவிட்டுப் போனார்கள் என்று சேக்கிழார் சொல்லிய சொல்கொண்டே புனைந்துரைக்கிறார். (கா. 59. 60. 61. 62. பெ. 153.) சேக்கிழார் முடிவிலா இன்பமான அன்பின் கதையினைக் கூறுகின்றாராதலின் நாகன் பட்ட பாட்டைப் பலபடப்



புனைந்துரைக்க வில்லை. ஆனந்தக் கூத்தரோ அதைப் புனைந்துரையாது விடுகின்றிலர். உவமையும் கூறுகின்றார். என்றாலும் "ஊணுறக்கமின்றி" என நாகனது நிலையைச் சேக்கிழார் குறித்ததற்கு இப்புனைந்துரை ஒவ்வாது எனலாம். ஊணுறக்கமற்ற நிலையைத் திண்ணனார்மேல் ஏற்றுகின்றார் ஆனந்தக் கூத்தர். ஆனால் அதனை எப்போது இவ்வேடர்கள் கண்டார்களோ யாமறியோம். "ஊணும் உறக்கமும் தணந்து போனான்" என்றிவர் கூறும்போது எல்லோர் மனமும் இரங்கிப் பதைக்கின்றன. "கருமுகில் என்ன நின்ற கண்படா வில்லியார்" என்று சேக்கிழார் பாடும்போது உவகைபூத்து உயர்நிலை யடைகின்றோம். துன்பமும் இன்பமாவதனைச் சேக்கிழார் கதையில் கண்டு துய்ப்பது போல இவர் கதையில் கேட்டறியவும் இயலாது.

மாலை வந்ததும் சோலையில் இரவெலாம் துயில்கொள்ளாது நின்றும், காலையில் வேட்டையைக் கடைப்பிடித் தொழுகியும் இவ்வாறு நாடொறும் வழிபட்டு வந்தார் திண்ணனார் (கா 63-பெ. 151). சிவகோசரியாரும் நாடொறும் அடைந்து மிச்சிற் கல்லையும் தசையும் வாரியே திருவலகிட்டு அழுதழுது இரங்கி நொந்து இறைவனை நோக்கி "இத்தீங்காற்றினர்க்கேள்" என்று வெறுத்துப் பேசி இறைவன் கையில் ஒப்படைத்து விட்டார். (கா. 64-பெ. 152. 155.) முன்போல் புனிதமாக்கி முறைவிதி வழாமல் பூசை இன்புறப் புரியு நாளில், ஓர் இரவு அம்முனி கனவில் வந்து ஞானப்பூங் கோதையம்மை கேள்வன் தோன்றி, "அன்பன் செய் பூசை ஏற்றமாகும். நீ சலியேல் (கா. 65-பெ 156 ) பாயிலை சேர்த்த கல்லைப் பனிகலத்திட்ட தேனூன் நேயமா முனிவர் இட்ட அவியினும் இனியது. (கா. 64. பெ. 161.) பாற்றிரைபுரட்டுந் தெண்ணீர்ப் பகீரதி அவன் வாயிலே ஊற்றிய நீருக்கொவ்வாது (கா. 67-பெ. 159.) கற்பகம் அவனிடு மலர் நிகராது (கா. 67-பெ. 160 ) அவன் பொன்மொழிக்கு வேதம் பழிச்சுவ போலா. (கா. 68-பெ. 162.) செருப்படி நமது மைந்தர் தண்படு பசிய தோட்டுத் தாமரைத் தாளைப்போலும் (கா. 68-பெ. 158.) வேடுவன் அவன் என்றெண்ணேல், வேடமும் நமதுவேடம், நீடுமெய்யன்பு அவன்மெய், நினக்கவன் பக்திகாட்ட மாடுறக்காந்து நாளை வைகுதி" என்று கூறிப் போயினார், என்கிறார் ஆனந்தக் கூத்தர். இப்பகுதி பெரியபுராணத்தைப் போன்றே இருப்பினும் ஊன்றிப் பார்த்தால் வேற்றுமை புலனாகாது போகவில்லை. சேக்கிழார் கங்கையைக் குறிக்கையில் திண்ணனாரது திருவாய் நீரின் உயர்வுதோன்ற அதனைச் சானு முனிவரரின் காதின் வழியாகவரும் ஓர் எச்சில் என்பது பட இகழ்ந்து கூறிப்போகின்றார். அவ்வெச்சில் நீர் இவ்வெச்சில் நீரைவிட உயர்ந்தது எங்ஙனம் என்பது தோன்றப் பாடுகின்றார். இந்நூலாரோ அத்தகுதி நோக்காது "பாற்றிரைபுரட்டுந் தெண்ணீர்ப் பகீரதி எனப் புகழ்தல் காண்க. சேக்கிழார் இளையபிள்ளையாராகிய முருகனையே குறிக்கின்றார். அப்பெருமானது திருவடியின்மென்மையை உலகமறிதலின் அதற்கோர் உவமை கூறாது "சேயடியிற் சிறப்புடைத்தால்" என்பதொடு நின்று விடுகின்றார். இந்நூலாரோ மைந்தர் எனப் பன்மையாற் கூறி இளையபிள்ளையாரையும் மூத்தபிள்ளையாரையும் குறித்து, அவர்களது திருவடியின் மென்மையை அடிபட்ட ஆண்டவனே உவமை வாயிலாக உலகுக்கு அறிவிக்குமாறு செய்கின்றார். இது நிற்க.

மாமுனிவர் இது கேட்டு உள்ளங் குளிர்ந் ததிசயித்து உறங்காது நின்றார். அதிர்கடல் அமுதம் பெற்ற ஆதுலன்போல ஆர்த்துக் கதுமென எழுந்து போய் முன்போல முறைப்படி போற்றி விமலன்பின் காந்துவைகிய யோகியானவர் நிதிமுகில் வரவு பார்த்து நின்ற பைங்கூழு மொத்தார். சிவகோசரியாரை யோகி என்று போற்றி அவாது மனநிலைக்கு இரண்டு உவமைகள் கூறியது குறித்து வைத்துக்கொள்ளத் தக்கதாம். (கா. 70. பெ. 165.) திண்ணனார் இலையமு தொருகை யேந்தி எழிற்சிலை யொருகை ஏந்தி, மலைமலர் தலையிலேந்தி வாயின் மஞ்சனமுமேந்தி வருகையில் தீய துந்நிமித்தங் கண்டு உலையுமுள்ளத்தராகிப் பதறி ஓடோடியும் வந்தார். (கா. 71. பெ. 167-168) "தேவனுக்கடுத்த தன்றோ? அறிகிலேன். தீங்கு ஏதேயோ? காவதம் கடந்து போனேனே? கடுகி நான் இனிச்செல்வேன்." என்று ஓடித் திருமுன் சேர்ந்தார். (கா. 72. பெ. 169.) மாசிலா முனிவற்கு அன்பு காட்டுவான் வலக்கணாலே செய்யவெங்குருதி காட்டினார் கடவுள். கண்ட திண்ணனார், கையினிற் சிலையும் சோரக் கல்லையும் தசையும் சோர, மையுறுகி கைப்பூச் சோர, வாயின் மஞ்சனமும் சோர, மெய்யும் ஆருயிரும் சோரக் கதறி வீழ்ந்தார், கடவுளைக் கட்டிக்கொண்டார் (கா. 73. பெ. 170.) "இப்படி வந்த தேனோ? செப்பு" என்று ஏங்கினர். உரையாடாமே தேவர் இருப்பக்கண்டு, குப்புற வீழ்ந்தார் சூழ்ந்தார். ஓடினார் குறுகிப் பார்த்தார். "மைப்பெரு விலங்கோ மீளி மறவரோ யாரோ செய்தார்" என்று (கா. 74. பெ. 1 1. 172.) வில்லெடுத்து அம்பு கோத்துக் காதமுமரையும் சென்று காடெலாம் துருவ, ஆங்கே, போதுவார் ஒருவர்க் காணார்; புள்ளும் வல்விலங்கும் காணார். மயங்கிப் பேதுற்றுப் பின்றேறி (கா.75. பெ.173 ) வெம்படைக் காயமாற்றும் மருந்தெலாம் வினவி ஓடினார், என்கின்றார் ஆனந்தக் கூத்தர். வேறொருவரும் காணக் கிடையாத காட்டில் யாரை வினவிச்சென்றார் என்பதை இவர் கூறுகின்றார் இல்லை. மேலே, திண்ணனார்குன்றும் கானும் முகரிக்கரையும் சென்று பறித்து வந்து தம்பிரான் திருக்கண்மீதுபிழிந்தனர். ஆனால் தணிதல் காணார். (கா.76.பெ. 176) அரைத்தரைத்து உண்டையாக்கி அலைகொழித்திழியும் சோரி கரைத்திடத் திருக்கண்மீதே கையினால் தைவந்து எய்த்தார். 'ஐயோ ஒரு மருந்தும் காணேனே" என வருந்தினார். நினைவு இனி, ஊனுக்கு ஊனே ஆதலின் அம்பால் அகழ்ந்து கண்ணினைச் சாத்துவேன், என்று களித்தனர். (கா. 77. பெ. 177.) வலமுறு கண்ணை யம்பால் வாங்கி அப்பச் சோரி மறைந்தது. இடக்கண்ணில் சோரிகண்டார். "நன்மருந்து கைகண்டேன் இனிமற்றைக் கண்ணை ஈர்ந்தாங் கப்புவன்" என்று தேறினார். (கா. 78—பெ 179. 180. 181.) மன்னொரு கண்ணும்போனால் வள்ளலின் குருதி நீத்தம், துன்னிடு கண்குறிப்புத் தோன்றாதாதலின், அதனை உளத்துநாடி, அதனை அறியும் அடையாளமாக செருப்புக்காலைத் திருவிழி அதனில் ஊன்றிப் பொன்னலகம்பால் தங்கண் பொருக்கென இடக்கும்போது, (கா. 79. பெ. 182.) திருக்காளத்திச் செல்வனார் திருக்கை நீட்டி, வாம்புலியனையவீரர் காத்தினை மகிழ்ந்து வவ்விக் "கண்ணப்ப விழியைச் சூலேல். ஆம்பரிசு உணர்ந்து செய்தாய் ஆறிய கண்ணோ" என்றார் (கா. 80. பெ. 183.) கண்ணினை குளிர்ப்ப, உள்ளம் களித்திட, மறைந்து வைகும் புண்ணியமுனிவர் கண்டார். புரந்தரன் அயன், மால் கண்டார். விண்ணவர் முனிவர் கண்டார். விரைமலர் மாரிபெய்தார். பண்ணினான் மறையும் ஆர்த்த, பஞ்ச துந்துபியும் ஆர்த்த, திவ்வியாழ் அமிர்தம் தேங்கும் காமர் அங்கனையாரோடு அமரரும் முனிவரும் திரையினார்த்துக் காளத்தி ஓங்கல் உற்றார் (கா. 81. 82. பெ. 184) வெள்ளை வாரணத்து வேந்தன், விரைமலர்ப்பொருட்டுப் புத்தேள், கொன்னைமா தவத்துக்

கண்ணன் முதலானோர் குழுக்கொண்டு எய்தி வணங்கினர். எள்ளிடை யின்றித் துன்னி எய்தினர். இவ்வாறெல்லாம் வந்தவர் கூட்டத்தைச் சிறப்பித்து ஒருபாட்டுக்கு மூன்றுபாட்டும் பாடுகின்றார், சுருங்கக் கூறும் ஆனந்தக் கூத்தர். அவர்களும் வருவது அவர் பாடவந்த கோயிற் பெருமையை வளர்க்கின்றது போலும். பின்னர்ப் பெருமான் பிடித்த கையை நெகிழ்வித்து "அன்ப! கண்ணப்ப! நம் வலப்பால் நிரந்தரம் நிற்றி" என்று நிறுத்திக்கொண்டார். புரந்தரன் முதலாவுள்ள புங்கவர் இறும்பூ தெய்திச் சிரங்களால் வணங்கிப் போனார்கள். இவைகண்ட இந்த நூலார் "அன்பினிற் சிறந்ததுண்டோ" என முடிவுகட்டிவிடுகின்றார். மந்திரம் அறியான். மாதவத்துறையும் தோரான்; தந்திரம் அறியான் - வேடன் சிவனைப் போற்றி இந்திரன் முதலானோர்கள் எய்துதற் கரும்பேறுற்றான். அவனே அப்பேறு பெற்றானானால், சிந்தையால் விதியிற் செய்தார், பெருமையார் தெரிக்கு நீரார் என்பெறார் என்கின்றார் கூத்தர். தாம் கூறவந்தது முத்தியடைந்த அத்தியாயம் ஆதலின்,

இனைய தன்மையால் வைகலோ ராறுநின் றிறைஞ்சி
அனைவ ரும்புகழ் திண்ணரும் சிவபத மடைந்தார்
நினைவ ரும்சிவ கோசரி முனிவனும் நிமலன்
தனைய ருச்சனை புரிதலாற் பரகதி சார்ந்தான்.

என்று இருவரும் வீடு பெற்றமை கூறி முடித்துத் தமது கதையின் தலைப்பை நிலைநாட்டுகின்றார் நமது ஆனந்தக் கூத்தர். வலப்பால் நிற்றலோடு விட்டுவிட்ட சேக்கிழார் கதை சுவையுடையதாகும். அதோடு நில்லாது பின்னும் கதையை வளர்த்திக்கொண்டு போவதால் திட்பமும் நுட்பமும் செறிவும் நிறைவும் நெகிழ்ந்து தளர்ந்து நீராய்க்கரைந்து சுவையற்றுப் போகின்றன. ஆனந்தக் கூத்தரும் அதையறிந்து,

இன்னமும் பலகாளத்தி மான்மியம் இசைக்கிற்
பன்னகாதி பனுரைக்கினு மனந்தநாட் படுமே
உன்னருந் தவமியாத மாமுனி எனக் கொருநாட் [னான்
சொன்னவா றெல்லாம் நினக்குரைத்தே னெனச்சொன்

எனச் சூதன்வாய் வைத்துக் கூறுகின்றார். அத்துணை அருள்புரிந்தமைக் கானந்தக் கூத்தரை வணங்கி அந் நன்றியைப் பாராட்டுவோம். T. P. மீனாக்ஷிசுந்தரன்.

காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(913-வது பக்கத் தொடர்ச்சி)

## 36. மறந்தாயோ நின்னுரையை.

மணிவாளன் முதலாய வேந்தர்மூவரும் முன்னாள் சித்திரமோகன மாளிகையை விட்டகன்று, தானைத்தலைவர் பிரதாபதீரரது மனையைத் தம் பரிவாரங்களோடு எய்தும்போது நள்ளிரவிற்குமேலாய்விட்டது. இவர் நின்று உற்றதுகேட்ட அப் பிரதாபதீரர், "ஐயகோ, வேந்தனது மைந்தனென்ற கண்ணோட்டத்தாலன்றோ அன்று யான் காவலும் கடியதாய் அமைக்காது விட்டேன். நரபாலன் கொன்றானல்லன். பாவியேன் நானே கொன்றேன். மன்னர்காள், இனிச்சென்று நம்கோமான் முகத்தைப் பார்ப்ப தெவ்வாறு, கூறுமின்!" எனப் பேதுறலெய்தி நின்றான். கஜேந்திரஸிம்மன், பிள்ளை போலழும் இத்தந்திரக் கிழவனிற்கு இரங்கி, "நண்ப, கலுழேல், கோமகற்கு, ஒரு நன்மகள் நல்கினேன் நானும், நல்குதற் கவாவிய இம்மணிவாளனும், அப்பாதகன் விராடனது உதிரமே ஊற்றி நீர்க்கடன் முடிக்கும் உறுதியாற் சிறிது ஆறியிருக்கின்றோம். அதுவரையில் எம் வஞ்சினம், துயரக்கடலுள் கரைந்து போகாமல் காக்கவேண்டியது எங்கள் கடன். நீ புலம்பக் காண எம் துன்பத்தைத் தாங்கிநிற்றல் அரியதாகின்றது. ஆதலின், நின் கண்களையும் எங்கள் கையிருக்கும் வாளைப் போல் ஈரமற்றன வாக்கிக்கொள்." எனத் தேற்றமுயன்றானேனும், "அட, மாள்விதி மருக, அன்று ஓர் பாண்மகன் மருங்குநின்று முந்திரிக் கொட்டையால் எனக்குப் பரிபவம் ஆக்கினானென்று யான் கொண்ட சீற்றம் இன்றுஇத் தாங்கொணாச் செல்லலாய் மாறவும் வேண்டுமோ!" என்று தானுமே துயரைத் தரித்திலன். "மன்னவா, நின்தன் சோகம் என்னின் பெரியதன்று. உன் மருகனோடு யானென் மடமகளையும் இழந்துளேன். விறலியின் வேடங்கொண்டு மண்டபமுன்றிலில் தோன்றினவளும், பின் நம் பொல்லாப் போர்க்கிடை விலக்கிப் புகுந்த நல்லாளும், என்மகள் மாலினியென்றே நினைக்கும் என் நெஞ்சு. உயிரைத் தொடர்ந்த உடலென்றே அவள் இளவரசனைத் தொடர்ந்துளாள். அவ்வுயிர் எட்டாக்கை ஏகிவிட்டதென் றுணர்ந்ததும் எங்குப்போய் மடிந்ததோ அவ்வுடல் அறிகிலேன்." என்று மணிவாளவேந்தனும் அருந்துயர் கூர்ந்தனன். இவர்களைக் காணக் காஷ்மீரத்தரசனுக்குங் கண்களில் நீர்தளும்பியது. இவன்தானும் மாலினியை ஒருநாள் காதலித்திருந்தானானாலும், இன்று அவளைத் தான் பெற்றிலன் என்னும் எண்ணத்திலும், அவள் தன் மனதிற்கினிய சித்ராங்கனைப் பெற்றிலாது போயினாள் என்னும் வருத்தமே அவன் மனதை உழக்க, "மணிவாள, மனம் நோகேல். இத்துணைக் காதல் வீண்போகாது. இன்று இழந்தவர்போல் தோன்றினாலும் நாளையே அவர் கூடி இனிது வாழ்வார்." என்று விண்ணினைக் காட்டிச் சொன்னான்.

பொழுது சிறிது விடிந்ததேனும், விடியாத்துயரத்தோடு இரத்தினபுரி ஏகுதற்கு நினைத்துத் தம் பரிவாரங்களை அழைத்துக்கொண்டு பிராதபதீரருடன் அன்னார் மனையின் கடைவாயிற் சென்றடைந்தவர், தமக்கெதிரே வாவுபரி விரைந்துகைத்து வருவான் ஒருவனைக் கண்டனர். கண்டவர் அவன் கொணருஞ் செய்தி எத்தகையதா யிருக்குமோ வென்றெண்ணுமுன் அவன் அருகு எய்தி யம்மன்னவரை முறையே வணங்கிக் கஜேந்திரஸிம்மன் கையில் ஒரு கடிதமும் பிரதாபதீரரின் கையில் மற்றொரு கடிதமும் நீட்டினான்.

கஜேந்திரஸிம்மன்,

இரத்தினபுரி
விஜயதசமி

பகைவர்காள்,

நும்புல்லியதலைமேலாணை, இங்கர் நண்ணற்க. எம்முடைய இளமகனைக் கொலைகண்ட கொடியீர், இன்னதற்குக் காரணந்தான் நீவி ரல்லரென யாம் ஆய்ந்து தெளிவதன்முன் எமதெதிர் வருவீராயின் விளிந்தீர். அவ்வவர்க் குரியவிடம் அங்கிருந்தே ஏகுமின். எம்பணி யாதெனப் பின்னர்ப் பொறித்தனுப்புவோம்.

விச்வகேசரி



என்றிருந்த வாசகத்தை ஓதி அடங்கா வெகுளியுடன் மற்றிரு மன்னவர்க்கும் காட்டினான். பிராதபதீரரும்,

இரத்தினபுரி
விஜயதசமி

பிரதாபதீரர் அறியவும்,

நின் கை அடைத்திருந்த எம்மொருகுமாரனைக் கொலைபோக்கிய கொடுமை ஆற்றுந் தன்மைத்தன்று. நின துடன்பாடு இதனில் எத்தூரமென்று யாம் ஆராய்ந் தறியுங்காறும் நின்னிழல் எந்தலைவாயி லாடவேண்டா,

விச்வகேசரி

என்று தனக்கு எழுதியிருந்த நிருபத்தையும் ஓதி, வியப்பும் துயரமும் மிதந்த கண்களோடு மற்றவர்களை நோக்கக் கஜேந்திரஸிம்மன், "நந்தங் கோமான் செய்கைத்திறம் நன்று. விராடன் தன் மதிகேட்டு வரைந்தனுப்பிய ஆணையாய் இது இருத்தல்வேண்டும். அதற்குயான் அடங்கமாட்டேன்" என்றனன். மணிவாளன், "விராடன் சொற்படி செய்ததாயினும்,வேந்தன் விடுத்த ஆணையாதலால், அதனிற்கு மாறாகப் போதல் நேரிதன்று. அருந்துயருழலும் நமதண்ணலைப் பெருஞ்சினங் கொள்ளவும் நாம் செய்வான் ஏன்! ஆதலின், பிரதாபதீரர் மாத்திரஞ் சென்று உற்றதை உரைக்கட்டும். அதன்மேல் நம்மை அரசன் அழைத்தால் ஏகுவோம்" என்றுரைக்கப் பிரதாபதீரர், "நானும் ஏகுதற்கில்லை. என் வரவும் நமதரசற் கருகிருக்கும் விராடற்கு இயைந்ததன்று" என்று தன் கைக் கடிதத்தையுங் காட்டினான். இதனைக் காண, "மன்னவன் இவனின் மதிகெட்டாரில்லை" என்று யாவருந் தம்முள் எண்ணிச் 'செல்வதோ நிற்பதோ' எனத் திகைக்குமளவில், கடிதங்கள் இரண்டையும் தன் கையில் வைத்து ஒப்புநோக்கிக் கொண்டிருந்த காஷ்மீரத்தரசன், 'அரசன்பால் செல்வதே நலமென் றெண்ணுகின்றேன்' என்று சாற்றினான். "அறிவிலியாயினும், மணிவாளன் முன் கூறியாங்கு, எம்மையாளுடைய அண்ணல்தன் ஆணைத்திறம் பிழைப்பதற்கு எங்கள் மனம் ஒவ்வுகின்றதில்லை. விச்வகேசரியின் ஆற்றலிற் கஞ்சி யாம் இது செப்புகின்றேம் அலேம். அவன் நொந்திருக்கும் நிலையையே நினைத்துக் கூறுகின்றோம்" எனக் கஜேந்திரஸிம்மன் இயம்பக் காஷ்மீரத்தரசன் கஜேந்திரஸிம்மனையும் மற்றிருவரையும் தனியே யழைத்து, "அரசன்தன் ஆணையேதானோ இதுவென்று ஐய முறுகின்றேன். இவ்விரண்டு கடிதத்திலுமுள்ள கையொப்பங்களை நோக்குமின். இரண்டாவதுளஎழுத்து ரகரமாய்த்தோன்றிப் பிறகுசகரமெய்யாகத் திருத்தப்பட்டிருக்கின்றது." என்று சாற்றினான். ஏனையவரும் அவ்வெழுத்துக்களை ஆய்ந்தனர். கஜேந்திரஸிம்மன், கடிதம் கொண்டுவந்த ஆளை விளித்து, "இக்கடிதம் நின் கையில் தந்தது யார்? எனவினவ, அவன், "விரா...விச்வகேசரி மன்னனே தந்தான்...எழுதியதும் எமதிறையே" என்றனன். "இனி, இதனிலோர் ஐயமில்லை. கடிதமும் பொய். கையெழுத்தும் பொய். அங்கு விராடனுக்குக் கையால் நேர்ந்த பிழை இங்கு அவனேவலில் வந்த இவ்வாளிற்கும் நாவால் நேர்ந்தது. நாமங்கு நணுகாவண்ணம் கொடியோன் விராடன் செய்துள காரிய மிது...கள்வா, மெய்யாக உன் கையொப்பமிட்ட கடிதம் வேறொன்று என்னிட மிருக்கின்றது. அது வந்து உன் தலையை அறுக்காமல் காக்க இயலுமாயின் காத்துக்கொள்...மன்னவர்காள் இன்னும் நாமிங்குத் தாழ்ப்போமாயின், மைந்தன் சென்றவழித் தந்தையையும் அனுப்பிவைப்பான், அப்பாதகன்......புறப்படுங்கள்" என்று கஜேந்திரஸிம்மன் கூறியதற்கு யாவரும் உடன்பட்டுக் கடிதின் ஏகினார்.

ஏகிய இவர், துண்டிலினி யாற்றைக் கடந்து நகரத்துள் சேர்ப்பிக்கும் பாலம் உடைந்துகிடப்பதைக் கண்டு "விராடன் செய்கின்ற கருமம் ஒன்றும் அரைகுறையாய் நிற்பதில்லை" எனத் தம்முளே தேர்ந்து அரைக்காதத்திற் கப்பாலிருந்த சிறிய பாலமொன்றைச் சென்றடைந்து, அது மெல்லிய மரப்பலகைகளால் அமைந்ததாகையால் குதிரைகளையும் சேனையின் பெரும்பகுதியையும் பின் நிறுத்தி, வேந்தர் மூவரும் பிரதாபதீரரும் மாத்திரம் சில போர்வீரர்களுடன் அதன்வழி நடந்து நகருள் புக்குச் சங்கரமண்டபத்தை நண்ணலாயினார்.

நண்ணினோர் நெடிதுதூரஞ் செல்லாமுன், முரசுங் காளமும் முழங்கு மொலிகேட்டுக் குன்றக்குறும்பர் போர் நடக்கின்றதென வுணர்ந்து பெரியதொரு திகப்படைந்தனர். "தன்னரு மைந்தன் மாண்டா னென்பதைத் தெரிந்திருப்பானேல் பின்னிம் மன்னவன் பெருங்குன்றப் போரிதனை நடத்திவைக்கவும் புகுந்திருப்பானோ!" என வியந்தனன் மணிவாளன்.

"விராடன் இதனை வேந்தனுக்குச் சொன்னதில்லை, அவ்வளவே. நங் கோமானது ஆணையாக நமக்கு விடுத்த கடிதம் அத்தனையும் பொய்யென்பதற்கு இதன் முன் ஏதேனும் சந்தேகம் இருக்குமாயின் இப்பொழுது அது அறவே தொலைந்தது...........இன்னும் மூன்று நாழிகைத்தூரம் நடப்பதற்குளது. விரைவின் வருமின்" என்று கஜேந்திரஸிம்மன் செப்பலும் யாவரும் துரிதமாய் நடந்தனர்.

இங்கிவர் இவ்வாறு வருவதன்முன் அங்குச் சங்கரமண்டபத்திற்கருகில் நியமித்திருந்த சிலம்பவெளியில் நிகழ்ந்தன பல. கடலே பொங்கிச்சூழ்ந்து மலையென நின்றதுபோல் அப்போர்வெளியின் எம்மருங்கும் நகரமாக்கள் கையாலும் குரலாலும் பேரொலி எழுப்பிய வண்ணமாய் அடுக்கடுக்காகக் கட்டியிருந்த பலகை ஆதனங்களிலும் பக்கத்திருந்த மரக்கிளைகளிலும் அமர்ந்து இருந்தனர். காலமாருதன்திறத்துப் •போர்புரியவந்த காளைவீரர்கள், இதுகாறும் செய்துகொண்டிருந்த வாள் பயிற்சி ஓய்ந்து அமர்ந்தனர் ஒருபுறம். மறுபுறத்தில் வஜ்ரதா வீரரும் அவ்வாறே. அவர்களுக்கிடையே யானைக்கன்றுகள் சூழவரும் ஒரு குன்றுபோல் தினகரன் தன்மைந்தர்கள் எண்மரோடும் மற்றுள வீரர்களோடும் நின்று வார்த்தையாடி இருந்தனன். மகேந்திரனது உள்ளத்திலுற்ற கவலை அவன் முகத்தில் படர்ந்திருந்தது. காலமாருதர் தங்கியிருந்த இடத்தை அடிக்கடி நெடிது நோக்கி ஏதோ எண்ணுவான்போலத் தோன்றினன். அன்னவன்பால் தினகரன் வந்தெய்தித் "தலைவ, வேந்தனும் வருகின்றான். போரும் இனித்தொடங்கும். விண்ணவர் அருளும், என் இரத்தத்தில் செந்நிறமும் உளதாயின் வெல்லவும் வெல்வோம்......நீ இன்னும் வட்டுடை தரித்துப் போர்க்கோலங் கொள்ளாதிருப்பதென்னே!" என்றனன்.

"எந்தாய், மறந்தனையோ உன்னுரையை? நின் மகளும் துறந்தனளோ தன்காதல்? மாணனுக்கே அவிந்ததுவோ அவள்பால் ஆர்வம்?" என ஏங்கினான் வஜ்ரதாரத் தலைவன்.

"மைந்த, போரென்னலோடும் பொருப்பென்ன வீங்கும் திண்டோள் வஜ்ரதாரர் குலத்தில் பிறந்த நின் வாய் வரும் இம்மொழிகள் கேட்க, என்னுயிரும் உணர்வும் உடலமும் உன்னுயர் முன்னையோர் நினைவும் கூசுகின்றன. என் கை வளர்ந்த பாலகன் நீ அல்லனயாயின் சீறுகின்ற இவ்வாளைச் சிறிதும் அடக்கிவையேன்."

"அடக்கவும் வேண்டா. என்னுளது என் வாழ்வினி! யான் இருந்தேன்! இறந்தேன்! அவ்விழுதைச்

சல்லியன் கருணாகரன் மனைவிட்டு என்று நீங்கினேன் அன்றே உயிரின் நீங்கினேன். என்மீது வாளை ஓச்சுகின்றது யாரானாலும் அவர் ஓர் பிணத்தைப் பார்த்துக் குறிவைத்தவரே யாவர்.''

"சிறுவ, நின்பொருள் தெரிந்ததில்லை. கருணாகரன் உன்னுடலைச் சிலகாலம் வளர்த்திருக்கலாம். மற்று உன்னுடைய உயிரோடு அவனுக்கு என்னை தொடர்பு. அல்லாது, நம் குன்றின்கண் வந்திருந்து இப்போது நம்மோடு மீண்டும் இருக்கின்றான் என நினைக்கின்றேன்.''

"ஆம், பிரிந்த உயிர் வந்தொருநாளும் சேரவே சேராதென்று செப்பவே வந்தனன். எனது ஆவியை ஏழேழ் பிறவிக்கும் ஒருங்கே எமன் கையில் காட்டித்தந்துளன் அக்கொலைஞன்............அவ்வுயிரை ஏற்றுள கூற்றுவனும் என் கண்முன்னே நிற்கின்றானே......''என்று மகேந்திரன் மருள்கொண்டு புரண்ட கண்களோடும் குழுமிய கூட்டத்துள்ளே ஒருசார் நோக்கினான்.

தினகரன் சிறிது நேரம் யாதுந்தெளியாது நின்றான். பயத்தினால் இவன் பித்தனே ஆயினானோ என்னும் ஐயம் அவனுக்கு உண்டாயிற்று. மகேந்திரன் பார்வை சென்ற இடம் தனது பார்வையையும் செலுத்தித் தினகரன் நோக்கினான். "மைந்த, எதிது! உன்னுடலின் தலையுமிழந்து, போர் தொடங்கு முன்னரே கவந்தமும் ஆயினாயோ! பித்தேறியதோ! வெறிகொண்டனையோ! வேறென்! உன் உரையின் பொருளும் செய்கையின் காரணமும் விளம்புதி?" என வினவினான். தன்பால் ஒருபோதும் அன்பின்றி யொன்றுந் தோன்றாதிருக்கும் தினகரன் இன்று இவ்வாறு வன்மையொடு பேசக் கேட்ட மகேந்திரனுக்குத் துக்கம் மேன்மேலும் வந்தடைந்தது. "தினகரத் தந்தாய், வெறியனல்லேன். பித்தனல்லேன், வெற்றுடம்பு சுமக்கலாற்றா வினையினேன். சுடலைக்கே ஈடுவைத்த இவ்வுடலை யான் காக்கச் சூழ்ந்தேன், ஐயோ,...'' என்று கண்களில் நீர் ததும்ப நின்றான்.

தன்னருந்தலைவனை இந்நிலையிற்காணத் தினகரனுக்கு இயற்கையாய இரக்கம் மிகுந்தது. "மகேந்திரா, கலுழேல், நின்னை இந்நாள் பீடிக்குந் துயர் யாதென உணரேன். போரிற்கஞ்சி நீ மனமுடைய வேண்டா. திண்ணிய என் மைந்தர் எண்மரும் யானும் உள்ளேம். மற்றையோரும் தசை வலியிலும் தீரவீரத்திலும் தளர்ந்தவரல்லர். காலமாருதர் ஆயிரம்பேர் கூடினும் எம்மை வெல்லுதற்கியலாது...ஆயினும் போரின் பயமே இப்பொழுது உன்னைஉழக்குகின்றதென்று எண்ணுகின்றேனல்லேன். எதனையோ கருதி நீ உன் வாழ்வினை வெறுக்கின்றாய். என்குடி மானம்போக யான் சுமிதையைத் துறக்கும்வண்ணம் செய்தாயென்று வருந்துவாயாயின் அதனை மறந்திடு. காதற்றெய்வம் முயன்றவர்களைக் கூட்டிவைத்ததென் றெண்ணித் தேறுவோம்...... மற்றுன் கூற்றுவனைக்கண்டதாகக் கூறினாய்......யாரே அவன், காட்டுவாய். கூற்றினிற்கும் கூற்றுவனாய் யான் காப்பென்......மைந்த மனமழியல். வழியல் நீர் நின்னினங் கண்கள்நின்று." என்று ஆதரத்துடன் தினகரன் மகேந்திரனை ஒருபுறம் அழைத்துச் சென்று தேற்றி யாரைக்கண் டவன்வெருவ லுற்றனன் எனவினவினான். தினகரனது வார்த்தைகளிலிருந்து மகேந்திரனுக்கு ஒன்று நிச்சயமாயிற்று. காலமாருதனைச் சேர்ந்தவர்களுள் யாவரிலும் இளையனான மாணன் வந்திலன் என்பதுணர்ந்தான். அவன் அத்திறத்தில் வாராக்கால் தான் போரிற் புகாது தப்பலாம். தினகரன் முதலாயினோர் தன்பொருட்டுப் பொருது வெற்றியும் பெற்றுத் தருவார் என்பது அவன் துணிவு. தன்னுயிர் தப்புதற்கும் வெற்றியைப் பெறுவதற்கும் இவன் அவாவியது, காதற்றெய்வம் முயன்று தன்னையும் காந்திமதியையும் ஒரு காலத்தில் கூட்டிவைத்தாலாகாதோ என்னும் நம்பிக்கையால் இது பொழுது நேர்ந்ததாயிற்று. இன்னவன் கண்முன் கலாநாதன் தோன்றினான் என்றால் என்பாடான்.

T. N. சேஷாசலம்.

பாரஸீகப் புலவர்

# உமார் கயாம்

என்பவர்தம்

## உறுதிமொழி.

'How sweet is mortal sovran'ty-'Think some
Others—'How blest the Paradise to come!'
Ah! take the Cash in hand and waive the Rest
O! the brave Music of a *distant* Drum.

'இம்மையிற் பெற்றதொரு செல்வத்தின் ஆட்சியே இனிது இனிது' என்று எண்ணுவார் சிலர். சிலர், 'வானுடு வழங்கவரும் பாக்கியமே பாக்கியம்' என்பர். செ! இவ்விருதிறத்தோர் கிடக்க, இருக்கின்ற பணத்தைக் கையிலே எடுத்துக்கொள். மற்றவெல்லாம் விட்டுவிடு. ஐய! சேணிடை ஒலிக்கும் முழவின் பெருமித இசையினால் யாருக்கென்!''

இந்தத் திப்பிய வாசகம், நூற்றாண்டு பதினொன்றினிடைக்காலம் வாழ்ந்த உமார் கயாம் என்னும் பாரஸீகக் கவிவரன் பாடிய ருபியத் என்னும் நூலின்கண் பொலிகின்றது. ஓதி உணருமுன் ஏடுகளைப் புரட்டி நோக்குவோர், உடலையே கும்பிட்டு வாழும் உலோகாயதர்தம் மதக்கொள்கையே இதனுள் காண்கின்றதெனக் கருதுவார். கிறிஸ்திய சகாப்தத்திற்குமுன், ஐரோப்பாவில் தோன்றி மறைந்துவிட்ட எபிக்யூரியர் (The Epicureans) கூட்டத்திலிருந்து எஞ்சி நின்றவன் இந்த உமார் என்று எளிதே எண்ணிவிட வேண்டா. அவர்களைப்போல், 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்,' என்னும் வாழ்க்கைக் கருத்தினன் அல்லன் இவன். இக்கவிவரன் கூற்றினில் பிழையில்லை, பொருளுமுண்டு. சிறிது நெருங்கி ஆராய்வோம்.

'இன்று உன் கையில் கிடைத்ததைக்கொண்டு யாவையும் அனுபவித்துக்கொள்' என்று, வெளவுதற்கு நம்மைக் கற்பிப்பதுபோல் இவ்வாக்கியம் மேற்பார்வைக்குத் தோன்றினும், வாஸ்தவத்தில் அது யாவையும் துறக்கின்ற சிந்தையையே தன்னுள் தாங்கியிருக்கின்றதென்பதற் கையமில்லை. இவ்வுலகின் நலங்களை இன்றே பெறவேண்டு மென்னும் அவாவுடன் விவகரிப்பதும், நாளைவரும் சுவர்க்கத்தைக் குறிவைத்து அதற்கான வினைகள் புரிவதும், வேறு வேறு வகைத்தாய கருமங்கள்போல் வெளிப்பார்வைக்குத் தோன்றுகின்றன. ஆயினும் உள்நுழைந்து பார்த்தால் இவை இரண்டும் வேறுவே றல்லவென்னும் வாய்மையை விளக்கத்தான் இப்பாரசீகப் புலவன் நினைத்துளான் என்பதை முதலில் உணரவேண்டும். கொடிகளாடும் மாடமும், பொன்திகழும் மண்டபங்களும், இடும்பணி தலைமேற்கொள்ளும் ஏவலாளர்களும், வாகனாதி வைபவங்களும், இம்மைக்குரிய மற்றைப்பேறுகளும் மாந்தர்பெறத் தேடுவது செல்வம். இனி வரவிருக்கும் மறுமையிலே வாயளவில் நூலளவில் தெரிந்த இன்பமெலாம் தான் பெற நாடுவது சுவர்க்கம் வாய்மையே நோக்கின் இம்மைச் செல்வமும் மறுமைச் சுவர்க்கமும் மூலமாய்ப்பற்றி நிற்பது ஒன்றையே. அதுவும்,நானென்றும் எனக்கென்றும் விவகரிக்கும் நினைவேயாகும். இத்தன்நினைவுதந்துவைப்பதுவோ, பிரபஞ்சமயமான சாந்திநிலையும், அச்சாந்தியால் எய்தப்பெறும் நிரந்தர இன்பமும் அல்ல; மற்று, எல்லையும் முடிவுமில்லாப் பூசலும் அல்லலுமே!

ஒன்று கொடுத்து மற்றொன்று பெறும் கருத்துடையோர் செய்வது வியாபாரம். இந்த வியாபார விவகாரத்தில் தேறிய சில மாந்தர்,யாகம் பலசெய்து அதற்கு ஈடாகப் பெற்றனர் தெய்வலோக வாழ்வை. அவ்வாழ்க்கையால் அவர் எய்தும் பயன்தான் என்ன? செயற்கரிய யாகம் நூறு செய்து வானவர்கோன் பெற்றபேறும் பெருமையும், கருணைக்கடல் காகுத்தன் ஊர்வதற்கு வாகனமாய் அமைந்ததிலும், கோசலக் கோமான் தசரதப் பெருவள்ளல் தண்குடைக்கீழ், முகம்பார்த்து அருள் நோக்கி இரந்து நின்றதிலுமேதான். உள்ள நேரமெலாம் எத்தீங்கு யாவரிடமிருந்து வருமோ, யாவன் யாகம் பல செய்து விடுவானோ என இமைப்பதையும் விடுத்து உன்னியும் ஏங்கியும் காலங்கழிப்பதும், வந்துற்ற தீங்கைத் தவிர்க்க அயலார்பாற் கையேந்தி நிற்பதுவும் வாழ்க்கையெனில், இன்பநெறியான தெனில், கூடாரக்காரன் மகன் உமார் கூறிவைத்த வாசகம் பிழையுடைத்தே.

பெருமகன் உமார் வாழ்க்கையில்தான் பெறத்தேடியது உலகெலாம் தன்னுள் அடக்கிநிற்கும் நிரந்தர அமைதி. கடல் கடையத் துணைநின்ற தைத்தியர்க்கு ஈயாது, வந்தெழுந்த அமுதத்தை 'என் உடலே வாழ்'என்று தாமே வயிறுகிழியக் குடித்த தேவர்தம் வாழ்வின் பெருமையோ செய்ந்நன்றி கொன்றதல்லால் வேறென்! சொல்லவும், கேட்கவும், உன்னவும் சுவை சிறிதுமில்லாத் தன்னய வாழ்க்கையை, அழகின் உணர்வினால் உள்ளூறக்கனிந்த மனதுடைய புலவன் கடியாது போற்றுவனோ. அச்சத்திலும், அது தந்துவைக்கும் போராட்டத்திலும் உழலும் வாழ்க்கையில் இல்லை துறவறத்தின் மெய்த் தத்துவம் பக்தியிற் சிறந்த பரகாலாழ்வார், .........'இச்சுவைதவிர, நான்போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை தரினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.' என மனமிளகி, உடலுருக எம்பிரானை இறைஞ்சும் மொழியை யறிந்தோர் உமார்கையாமுடன் கைகோத்துப் பாடி யமையாரோ?

இம்மையிலோ மறுமையிலோ தனக்கொன்று வேண்டுமென்று மாந்தர் ஆற்றும் வினைகளுக்கும், துறவுக்கும் இடையிருப்பது நெடுந்தூரம். 'எனக்கு இது வேண்டும்' என்னும் சொற்றொடரின் பொருள்தான் என்ன? மற்றவர் வறுமையைப் பொருட்படுத்தாது பார்க்கின்ற நோக்கமன்றோ வது? ஒவ்வொரு மனிதனும், பிறன் பெறுமுன் தானொன்றைத் தனதாகப் பெறவேண்டுமென்று விவகரிக்கப் புகுவானாயின் விளைவன 'முந்துவது நீயோ, நானோ,' என்னும் போராட்டமும் பகையுமே எனின், வாழ்க்கையில் அன்பிற்கும் அமைதிக்கும் அதுநல்கும்முத்திக்கும், வழியேது. இன்னும்பார்ப்போம். நாம் ஒன்றை விரும்புவதால் அதுவல்லாத வொன்றை வெறுக்கின்றோம்என்பது வெளிப்படை.விருப்பம் என்ற சொல் வெறுப்பையும் தன்னிடைக் கொண்டுள்ளது. எனவே விரும்பாது வெறுக்கவும், வெறுக்காது விரும்பவும் இயலாது என்பது தெரியலாகும். அபேத தத்துவத்தினதான துறவு தழைப்பது விருப்புவெறுப்பு என்னும் பூண்டுகள் அடர்ந்த சேற்றிலில்லை. தெளிந்த நீர்ப் பொய்கையில்தான் முளைக்கும் துறவெனும் தாமரை. அத்துறவுநிலை எய்தினோர் எய்துவது முடிவான பரிபூரண அத்துவைதப் பேரின்பம்.

இந்நிலையை அடைதலே வினையால் எடுத்த பிறவியின் முடிவென்று மறைகள்யாவும் அறைகின்றன. வித்தகர் யாவரும் விளம்புகின்றனர். ஈதெய்தவே முயன்றான் பாரசிகக் கவித்திலகன் உமார்கையாம். கற்பன கற்றுக் கேட்பனகேட்டுத் தெளிவு பெற்றதொரு வாழ்க்கையில் பொருந்திய இப்பெருமகன் நுண்ணிய மனதில், அறிவுடைய பெரியோர் மனத்திலே எந்நாளும் எழுகின்ற கேள்விகள் எழுந்தன. 'நான் யாவன், இவ்வுலகிடை வந்ததெதற்கு, நான் செல்வது மெவண்?' என்பன போன்ற பலகேள்விகள் மனத்திடை வேர்விட்டு வளர்ந்துவர, விடையொன்று தேடத் தலைப்பட்டான். அவன் நாடிய நூல்களும் விடையோவொன்றும் உள்ளத்தெழுந்த புதிருக்குத் தருவதாகத் தோன்றவில்லை. என் செய்வான்? 'விண்ணுலகத் துறவுகோல் எங்களிடம் உள்ளது' என்று கூறி இறுமாந்து கிடக்கும் பல சாஸ்திரிமார்களையும் சாமியார்களையும் சென்று அடுத்தான். அடுத்ததால் அவன் பெற்றது யாதெனப் பார்ப்போம். கூறுவான் அவன்,

Myself when young did eagerly frequent
Doctor and saint, and heard great Argument
About it and about; but evermore
Came out by the same Door as in I went.

'இளமையிலே யான் சாஸ்திரியையும் சாமியையும் ஆர்வமுடன் சேர்ந்து பார்த்தேன். இதுபற்றி அதுபற்றிப் பெரும் பெரும் வாதங்கள் செய்வதையும் கேட்டேன். ஆனால் என்! என்றென்றும் சென்ற வழியே திரும்பி வரலாயினேனே.'

தீராத ஐயத்துடன் போனவழி திரும்பியதுதான் அவர் காட்டியதும், நான் கண்டதும் என்று கவிவான் நொந்த மனத்துடன் கூறுகின்றான். இன்னும் கூறுவான்,

With Them the seed of wisdom did I sow,
And with my own hand laboured it to grow;
And This was all the harvest that I reaped
I came like water and like wind I go.

'அவர்களோடு விதைத்தேன் அறிவின் விதை. என்கை வருந்த வளர்க்கவும் வளர்த்தேன்—நான் அறுத்த பயிரோ இவ்வளவுதான்—நீரைப்போல் வந்தேன், காற்றைப்போல் போகின்றேன்.'

உழுது, பரம்படித்து விதைத்து நீர்பாய்ச்சி வளர்த்த பயிர், விழலாய் முடிந்ததென்றால் யார்தான் மனம் நோகார்? மீண்டும் மீண்டும் விழலையே தரும் வித்திற்குத் தேடிச் செல்வானோ தெரிந்தவன். விழலை மணியென்று கூறினால் நகைத்திடாரோ சில மாந்தர். வித்தகர் தாம் எனக் கூறிக்கொள்ளும் பண்டிதர் சாது சாமியார் இனங்களைச் சேர்ந்தவர், இவன் மனதைத்தெளிவிக்கும் தன்மையிலராக, மற்றென் செய்வான்! "நீரென வந்தேன் காற்றெனப்போகின்றேன் யான்,'' எனத் தானெடுத்த சென்

மத்தைத் தானே பரிகசம் செய்து கொள்கின்றான் என்னிநகைத்தனன்,

> Into this Universe, and *why* not knowing,
> Nor *whence*, like Water willy-nilly flowing
> And out of it, as Wind along the Waste
> I know not *whither*, willy-nilly blowing.

"எங்கிருந்து வந்தேனென்றும், வந்ததுவும் ஏனென்றும் தெரியாமல் கண்டவிட மங்குமிங்கும் பாய்ந்திடும் புனலேபோல் இப்புவியினிற்குள் புகுவதும், அதைவிட்டு எங்கென்றுந் தெரியாமல் கண்டபடி அங்குமிங்கும் பாலைவனம் அடித்தகலும் காற்றைப்போல் போவதுவும்" ஆயிற்றே என்றன் விதி, என்று ஏங்கினன்.

பெருத்ததோர் ஆபத்திலோ துக்கத்திலோ ஆழ்ந்தவர் அதனின்று கரையேறும் வகையில்லை என்னும் கையறுநிலை யெய்தியவுடன், முதற்கொண்ட பயமும் துக்கமும் அவர் உணர்வினிலிருந்து அழிந்துவிடுவது இயற்கை. பேதுறவு எய்திநின்றார் பெரியதோர் துணிவு கொள்வார். உமாரின் நிலை அன்ன தன்மையதாயிற்று.

(தொடரும்.) K இராஜகோபாலன்.

[குறிப்பு:—இவ்வியாசத்தில் வரும் எபிகியூரஸ் என்பவரைப்பற்றி கலாநிலயத்தின் 42-வது இதழின் 825-வது பக்கத்தில் ஸ்ரீமான் டி. ஆர். இராஜகோபால் என்பவர் நன்கு விளக்கியுள்ளார்.]

# கம்ப ராமாயணம்.

## பாலகாண்டம்

## 9. அகலிகைப்படலம்.

(919-ம் பக்கத் தொடர்ச்சி.)

### கருத்துடன் கலந்த சிலேடையே சிறக்கும்.

மிதிலா நகரம் நோக்கிக் கோசிகனோடு புறப்பட்ட இராம இலக்குமணர்கள், அன்று மாலைப்போது சென்றடைந்த சோணையாற்றின் வருணனைச் செய்யுளை முதலாகப் பெற்று அகலிகைப்படலம் ஆரம்பமாகின்றது. கம்பர் சிற்சில படலங்களின் முதல் பாசுரத்தைச் சிலேடையாகப் பாடுவதுண்டு. அவைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்ற,

அலம்பு மாமணி யாரத்தோ டகிலளை புளின
நலம்பெய் பூண்முலை நாகிள வஞ்சியா மருங்குல்
புலம்பு மேகலைப் புதுமலர்ப் புனையறற் கூந்தல்
சிலம்பு சூழுங்காற் சோணமாந் தெரிவையைச் சேர்ந்தார்.

என்னு மிச் செய்யுள் இப்படலத்தைத் துவக்கிவைக்கின்றது. அசைகின்ற சிறந்த இரத்தினங்களும் முத்தும் அகிலும் பொருந்திய மணற்குன்றுகளென்னும் அழகிய ஆபரணங்களணிந்த முலைகளையும், இளங்கொடியாகிய இடுப்புபைம், சப்திக்கின்ற அலைகளாகிய மேகலாபரணத்தையும், புதிய மலர்களால் அலங்கரித்த கருமணலாகிய கூந்தலையும், சிலம்புசூழும்கால் களையுமுடைய சோணமா நதியெனும் நங்கையை அடைந்தனர், என்பது இச்செய்யுளின்பொருள். இதனில் சிலேடையாகப் பயின்றுவருஞ் சொற்கள், 'சிலம்பு சூழுங்கால்' என்று ஈற்றடியில் இருப்பவைகளே. இவை, 'மலைகளைச் சூழ்ந்திருக்கின்ற நீர்க்கால்களையுடைய சோணம்' என்று ஆற்றினோடும், 'நூபுரங்களை அணிந்த கால்களையுடைய தெரிவை' என்று நங்கையோடும் சேரும். மற்றவகை இச்செய்யுள் ஆற்றினை ஒரு பெண்ணிற்கு உருவகப்படுத்தி, மணற்குன்றுகளைப் பூணணி முலைகளாகவும், கொடிகளை இடையாகவும், அலைகளை மேகலாபரணமாகவும், கருமணலை மலரணிந்த கூந்தலாகவும், அவ்வுருகத்தின் அங்கங்களாகப்பெற்று நிற்கின்றது.

சிலேடையை இனிமையும் நயமும் படக்கையாள்வது சுலபமன்று. கலையுணர்வு சிறிதுமின்றிச் சிலமொழிகளைப் பிடித்தளைந்து கவிபாடப் புகுகின்றவர்களுக்கு எளிதில் வாயிலக்காகக் கிடப்பது இச்சிலேடை. ஆனால், கலையெனும் நலத்தினால் முதிர்ந்த சான்றோர் உலகப் பொருள்களுக்கிடையே தோன்றுகின்ற வேற்றுமையை விலக்கி அவைகளைத் தம் அகன்ற இருதயத்தில் ஒரு தன்மையனவாய் அமைத்துக் கொள்வதற்கு முயல்கின்ற முயற்சியே சிலேடை பாடுவதின் மெய்யான திறம். இவ்வாறன்றிச் சொற்கள் சிலவற்றிற்கிருக்கும் ஒன்றிற்கு மேற்பட்ட அர்த்தத்தையும், தொடர்கள் பலவிதமாய்ப் பிரிக்கமுடிகின்ற அமைப்பையுமே தமக்கு உதவியாகக் கொண்டு வாக்கியத்தளவில் வேறு இரண்டினை ஒன்றாகக் கட்டினாலும், வாஸ்தவத்தில், அது செய்பவர் மனதில் தங்கியிருப்பதும், ஓதுவோர் மனதில் தோன்றி எழுவதும் வேற்றுமை நினைவேயன்றி ஒற்றுமை அழகோ ஒருபோதும் ஆகாது. தேங்காய் ஓட்டிற்கும் சிவபிரானிற்கும் சிலேடை பாடுவாருமுளர். இது சொல்லின் திறத்தால் மாத்திரம் சேர்வதன்றி மனதில் இணைந்துஉடன்நடக்கும் சுவைஇல்லாமல் அமைகின்ற சிலேடை. இன்னவர்களைத்தான் ஆங்கிலத்திலும் "Unelbowed by punster pimp or player" என்று தக்கபடி பழித்திருக்கின்றனர்.

கம்பரோ பலபொருள் ஒருமொழி, புணரிலக்கணம் முதலியவைகளின் உதவியைப் பெரிதும் எதிர்பாராமல் நேர்முகமாக இரண்டினை ஒன்றாய்க் கருத்தினால் பிணைக்கும் செவ்வி உடையவர். சோணையாற்றை ஒரு பெண்ணென்று வெகு சுலபமாய் உருவகப்படுத்தினர் இங்கு. இனி, உருவகத்தின் உதவிகூட நாடாமல் தன்மை அளவிலேயே இருவேறு விடயங்களை ஒன்றாக இவர் பொருத்துகின்ற பெருமையினைச் சூர்ப்பணகைப் படலத்து முதற்செய்யுளில் காணலாகும். அங்கு வருவதும் ஒரு ஆறு. அது கோதாவரி. கோதாவரி நதிக்கும் சான்றோர் கவிக்கும் பொருத்தம் பாடுவார்,

புவியினுக் கணியா யான்ற
பொருடந்து புலத்திற் றாகி
அவியகத் துறைக டாங்கி
ஐந்திணை நெறி யளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்

என்றனர் கம்பர். இதனில் இருபொருள் தரப் பயின்ற சொற்கள் வெகுசில. இச்செய்யுளை ஓதி வருகின்ற அளவிலேயே கோதாவரி நதிக்கரையின் தண்மையால் உடலும், சான்றோர் கவிகளின் நினைவினால் மனமும், ஓதுவோர் ஒருங்கே குளிரப் பெறுவர். பதங்களைப் பிரிக்கின்ற வருத்தம் வேண்டா. உருவகத்தைப்போல் ஒன்றை வேறொன்று என்று பாவித்துக்கொள்ள வேண்டிய முயற்சி வேண்டா. புலம் அகம் திணைஎன்னும்சொற்கள் இருபொருளில் அமைகின்றனவென்பதை அறிதற்கு அகராதியும் அருகில் வேண்டா. தம்முடைய அமைதியை அச்சொற்கள் தாமே சொல்லிக் கொள்கின்றன.



சோணையாற்றை இங்குக்கண்டது இராமன். கோதாவரியைக்கண்டதும் அவனே. இவ்விரண்டிற்கு மிடையே இருபத்துநான்கு வருடங்கள்கடந்தன. காலதேச வர்த்தமானங்களை ஒட்டி இவ்விரண்டு வர்ணனைகளையும் ஒப்பு நோக்கினால் ஒன்று புலப்படுகின்றது. இவ்விரண்டு செய்யுள்களும் கவிக்கூற்றுகளாக இருந்தபோதிலும், அந்நதிகளைக் கண்ட இராமன்தன் குறிப்பை ஏற்றே வருணனைகள் நேர்ந்திருக்கின்றனவென்று எண்ணுவது நேரிதாகும். சோணமா நதியைச் சேர்ந்தபோது இராமன் இளமைப் பருவத்தினின்று யௌவனத்துள் எய்துகின்றநிலையில்இருந்தவன்.சீதாபிராட்டியைஇன்னும் அடைந்திலன். அழகிய பொருளொன்றைக் கண்டக்கால் அப்பொருளை அழகுடைய பிறபொருள்களுடன் சேர்த்து நினைப்பது மனதிற்கு அதன் இளமையில் இயற்கை. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய பொறியுணர்வினால் கிரகிக்க வேண்டிய காலத்தில், அவ்வழகிற்கு உருவம் முதலிய நிலைகள் இருக்க வேண்டுமென்பது இன்றியமையாததாகும். ஆதலால், சோணையாற்றின் அழகை உருவகப் படுத்தினான்போலும். அவ்வாறு உருவகப்படுத்தும்போது கன்னியொருத்தியின் எழிலுரு அவன் கண்முன் நிற்கின்றது. கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐவகைத்தாய அழகும் காரிகையார் கண்ணே உளவாதலால் அழகின் தொகுதியென்று ஐம்புலன்களால் அனுபவிக்க நினைப்பதற்கொத்த இராமனது இவ்வயதில், அவன்கண்ட சோணமாநதி, தெரிவையை ஒத்தது.

சீதாபிராட்டியுடன் பயில்வதற்கு முற்பட்ட இராமனுக்கு எதிரில் பாய்ந்த இவ்வழகிய ஆறு அவன் மனதில் ஓர் கன்னியின் எழிலோடு கலந்துநடக்கும் உருவம் பெற்றதெனின், பிறகு அம்மாதரசியுடன் நெடுநாள் பழகியபின் அவன் கண்ணுற்ற கோதாவரி சான்றோர் கவிபோல் அவனுக்குத் தோன்றியது,அவன் மனது இடைக்காலம் வளர்ந்தடைந்த முதிர்வைக் காட்டுகின்றதாகும். அழகை, அதுதிகழும் பொருளிலிருந்து பிரிக்காமல் அப்பொருளோடு சேர்த்துக் கண் முதலிய பொறிகளால் அனுபவிப்பது யௌவன பருவத்து மனதிற்குரிய காரியம் என்று முன்னர்க் கூறியதை உணர்ந்தால் பின் வருவது விளங்கும்.பொருளோடு சேர்ந்துசேர்ந்து அழகைப் பொறிகளால் அனுபவிக்கப் பழகுகின்ற மனம் முதிர முதிரப் படிப்படியாய் அவ்வழகைப் பொருளைவிட்டுத் தனியாகப் பிரித்துக்கொள்ளாது அமையாது. ஏனெனில் பொருள்கள் யாவும் காலகதியில் மாறியும் அழிந்தும் போகக்கூடியன. அழகோ மாறப்படாததும் அழியக்கூடாததுமான ஓர் தன்மை. எனவே அழியாத அழகின் அனுபவம் அழிகின்ற பொருளைச்சார்ந்து நிற்பதும் நீங்குவதும் நேரவேண்டுமோ என்னும் நினைவு பெரியதோர் மனக்குறையை உண்டாக்கும். ஆதலால், தம்மனது, இயற்கையாய்வளர்ந்துமுதிர்வடைகின்ற மாந்தர், நிலையில்லாப் பொருளைக் கழித்து நிரந்தரமாய அழகை மாத்திரம், பொறியறிவிற்கு வேண்டிய உருவமாதி நிலைக்களங்கள் அதற்குக் கொடாமல், தன்மையளவில் தம் கருத்தால் இன்புற்றனுபவிக்கும் பெற்றியை அடைகின்றவர் களாகின்றனர். இவ்விதம் கருத்தால் அனுபவிக்கின்ற அழகு கவியழகு. பொருளொடு பயிலாமல் அழகென்பது தன் தன்மைமாத்திரையில் நல்குகின்ற இன்பம். இன்பத்திலே இன்பம் இவ்வின்பம் என்று சொல்லவும் வேண்டுமோ. அவ்வகைத்தாய இன்பம் தன்னைக் கண்டவர்பால் உதிக்கும்படி செய்யும் மேன்மையள் ஜனகன் பெற்ற அன்னம். மிதிலையில் முனிவனோடு ஏகிய இராமன் முதல்முதல் கன்னிமாடத்து அன்னம் ஆடும் முன்துறையில் காட்சி செய்தபோது அவளைத் "தென்உண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவி இன்பம்" என வருணிப்பார் கம்பர் அன்னவள் கூட்டுறவுபெற்றுப் பலவாண்டுகள் வாழ்ந்த இராமபிரான் பின்னாள் கோதாவரி நதியைக் கண்டானென்னின் அதன் அழகிற்கு ஓர்இணை தன்மனதில் அமைக்குங்கால், அங்குச் சான்றோர் கவியே நேர்வதாயிற்று. முன் சோணையைக் கண்டபோது அதன் அழகிற்கு இணையாக ஒரு பெண்ணின் உருவம் வேண்டியிருக்கக் கோதாவரிக்கு இங்குக் கவியின் கருத்தே இணையாகின்றது. இடைநின்ற காலத்தில் இராமன் மனப்பான்மை அடைந்த முதிர்ச்சியாலும், செஞ்சொற் கவி இன்பம் போன்ற சீதையோடு உற்ற பயிற்சியாலும் இம்மாறுபாடு தோன்றுவது புதுமை யல்லவே.

கவியினது குறிப்பைப் பாத்திரங்கள் மீதேற்றிப் புகல்வது பெரும்பான்மை முறையாயிருக்க நாடகவுணர்ச்சி ததும்பும் கம்பர் இங்கு ஒப்புக்காட்டிய இவ்விரு ஆறுகளின்வர்ணனையில் பாத்திரத்தின்குறிப்பைத் தானேற்று, இராமனது உணர்விற்கு ஏற்றவாறு இருவிடங்களிலும் பாடினார். எனினும், கம்பர் தானாகத் தன் நினைவின்படியே அமைத்த சிலேடைச் செய்யுள்களுஞ் சில இந்நூலின்கண் இல்லாமற் போகவில்லை. சொற்களைப் பற்றிச் சிலேடையாகவும் யமகமாகவும் கையாளும் திறத்தை அவர் வரைக்காட்சிப் படலத்தில் நன்றாகக்காட்டி இருக்கின்றார். அப்படலத்தின் முதற் செய்யுளும்,

கோவை யார்வடக் கொழுங்குவ டொடிதர நிவந்த
ஆவி வேட்டன வரிசிலை யனங்கன்மேற் கொண்ட
பூவை வாய்ச்சியர் முலைசிலர் புயத்தொடும் பூட்டத்
தேவ தாரத்துஞ் சந்தினும் பூட்டின சிலமா.

என்று, யானைக்கும் மாதர்முலைக்கும் சிலேடையாக அமைந்திருக்கின்றது. முதலடி முலையைக் குறிக்கும்போது, "ஆகாயத்தை அளாவிய வடக்கிலுள்ள செழிப்பான மேருமலையும் நிகராகாது தோற்கும்படி உயர்ந்தன" என்றும், யானையைக் குறிக்கும்போது, "வரிசையாகப் பொருந்திய ஆலமரத்தின் செழிப்பான கிளைகள் ஒடியும்படி உயர்ந்தன" என்றும் பொருள்படும். 'ஆவி வேட்டென,' என்பது 'ஆடவர்களது உயிரை விரும்புவன' என்று முலைக்கும், 'தடாகத்தை நாடுவன' என்று யானைக்கும் பொருந்தும். "வரிசிலை அனங்கன் மேற்கொண்ட," என்பது, "கரும்புவில், மன்மதன் முதலிய உருவங்களைத் தம்மேல் தொய்யிலாக எழுதப்பெற்ற முலைகள்' என்றும், 'கட்டமைந்த வில்லுடைய மன்மதன் போன்ற ஆடவர் தம்மேல் ஏறியிருக்கப்பெற்ற யானைகள்" என்றும் ஆகும். முன் இருநதிகளையும் பற்றிக் கூறிய செய்யுள்களைப்போல் அவ்வந்த நதிக்கும் அதற்கு இணையாகச் சேர்க்கப்பட்டுள்ள மாதர் சான்றோர்கவி ஆகிய இவைகளுக்கும் அழகெனும் தன்மையால் ஏற்பட்ட ஒற்றுமை ஒன்றும் இந்தச் சிலேடையில் இல்லை. மாதர் முலையும் யானையும் சொல்லமைப்புத் திறத்தினால் மாத்திரம் இணைக்கப்பட்டுள்ளன.

இதுவன்றி அவ்வரைக்காட்சிப்படலத்தில், வார்த்தைகளை மாத்திரம் வளைத்துப் பிணைக்கும் சதுரப்பாடு தோன்ற,

ஊறு மாகட மாவுற வூங்கெலாம்
ஊறு மாகட மாமத மோடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே

189030.

[பெரிய காட்டிலுள்ள மா மரங்கள் சிதைவடையும் படி அவ்விடங்களிலெல்லாம் ஊறுகின்ற பெரிய யானைகளது மதசலம் ஓடும் வழியில் சேர்ந்த வனத்தின்கண் ஆச்சாமரமும் மூங்கிலும் ஆடும். ஆறுகளில் சேர்வன மிருகங்களும் வரையாடும், என்றும்

கல்வி யங்கு கருங்குற மங்கையர்
கல்லி யங்ககழ் காமர் கிழங்கெடா
வல்லி யங்க ணெருங்கு மருங்கெலாம்
வல்லி யங்க ணெருங்கி மயங்குமே.

[மலையில் சஞ்சரிக்கும் பெருமை பொருந்திய குறத்தி மாதர் கல்லி என்னும் கருவியால் அங்குத் தோண்டி அழகிய கிழங்கை எடுப்பதற்கு—புலிகள் அடர்ந்த அவ்விடமெலாம் (அவை வாராதபடி) வலிய (பறை முதலிய) வாத்தியங்கள் கலந்து ஒலிக்கும்] என்றும் பல பாசுரங்கள் வந்தன. எனினும், இன்னபடி பாடுந்திறம் வேண்டுமாயின் தனக்குளது என்று கம்பர் காட்டிவைப்பதற்கு இவை அமைந்தனவேயன்றி வேறல்ல. உண்மையாய அவர் நுண்ணுணர்வைக் காணவேண்டுமாயின் செம்மொழிச் சிலேடைகளால் உயரிய கருத்துக்களை அவர் விளக்குகின்ற பாசுரங்களுக்கே போதல்வேண்டும். வரைக்காட்சிப்படலத்தில், கட்டிய கயிறை அறுத்துக் கொண்டு செல்கின்ற குதிரையையும், கர்ம மார்க்கத்தில் செல்கின்றவோர் உத்தமனையும் சிலேடையால் இணைத்து,

மும்மைபுரி வன்கயிறு கொய்துசெயன் மொய்ம்பால்
தம்மையுமு ணர்ந்துதரை கண்டுவிரை கின்ற
அம்மையினொ டிம்மையை யறிந்துநெறி செல்லும்
செம்மையவ ரென்னநனி சென்றன துரங்கம்

குதிரைகள், மூன்று புரியாகிய வலிய கயிற்றை அறுத்துப் போர் முதலிய செயல்களின் வலியால் தம் திறத்தையு முணர்ந்து தரையைப் பார்த்துக்கொண்டு வேகமாய்ச்செல்கின்ற (சுயேச்சை அடையப்போகும்) அவ்விடத்தின் தன்மையையும் (இப்பொழுது பாகனுக்கு அடங்கி இருக்கும்) இத்தன்மையையும் சீர்தூக்கிப் பார்த்து (குதிரைகள்,) 'செம்மையவர்'களைப் போலச் சென்றன என்று குதிரைகளுக்கும், தம் கர்மங்களைச் செய்கின்ற திறத்தினால் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று பாசங்களை விலக்கி, 'தங்களுடையை மெய் நிலையை உணர்ந்து இவ்வுலகத்தின் தன்மையைத் தெரிந்து கொண்டு எவரும் விரும்புகின்ற சுவர்க்கத்தையும் இவ்வுலக வாழ்க்கையையும் ஒன்றேயாக மதித்துக் கடமையை ஆற்றும் செம்மையவர்கள்' என்று நிஷ்காம்ய கர்மங்கள் இயற்றி மற்றொன்றும் கருதாமல் வீடுநிலை அடைகின்ற செம்மையவர்களுக்கும் இச்செய்யுள் பொருந்துகின்றது. கர்ம மார்க்கத்தின் இலக்கணத்தையும் பயனையும் கட்டறுத்து ஓடுகின்ற குதிரைகளைக் கொண்டு இன்னவிதம் காட்டிய கம்பர் யோகிகளின் தன்மையை எழுச்சிப்படலத்தில்,

கொற்றபல் லியங்க ளெங்குங்
    கொண்டலிற் றுவைப்ப பண்டிப்
பெற்றவே றன்னப் புள்ளிற்
    பேதையர் வெருவி நீங்க
முற்றுறு பரக்க ளெல்லா
    முறைமுறை பாசத் தோடும்
பற்றற வீசி யேகி
    யோகியிற் பரிவு தீர்ந்த

என்னும் செய்யுளில், வண்டியில் பூட்டிய எருதுகள் வாத்தியங்களுக்கு வெருவிக் கயிற்றை அறுத்துக் கொண்டு வண்டியினின்று கழன்று ஓடி நிற்பதைக் கூறுவார்போல் கூறுகின்றார். முற்றறுபரங்கள் எல்லாம் முறைமுறை பாசத்தோடும் பற்றற வீசி ஏகுவதில் எருதிற்கு யோகியர் நிகராயினர். முரசு முதலிய வாத்திய ஒலிகளுக்கு மருண்டு வன்மையோடு கயிறை அறுத்துக் கொண்டுதாம் செல்கின்றமார்க்கத்தில் மாதர்களை அணுகவொட்டாமல் ஓட்டம் காணும் எருது, பிறவிக் கடலொலிக்கு அஞ்சி மனைவியரைத் துறந்து தம் உடல் மெலிய யோகங்கள் செய்வதற்கு அகல்கின்ற யோகியர் போன்றதாயிற்று. இது பயத்தால் உண்டாகிய ஓர் வெறுப்பைப்பற்றி நேர்வது, "தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே" எனப் பக்திமார்க்கத்தைக் குறிக்கும்போது அது விருப்பினால் உண்டாமாறு தெரிகின்றது. கருமமார்க்கத்தைப் பற்றித் துரங்கங்களோடு சேர்த்துச் சொன்னபோது விருப்பு வெறுப்பற்ற ஓர் நிலை தோன்றுகின்றது. மிதிலைக் காட்சிப்படலத்தில் குதிரைகள் சுழன்று ஓடுவதைக் கூறுகின்ற ஓர் செய்யுளில், "ஞானிகள் உணர்வின் ஒன்றாய்க் கட்புலத்தினைய வென்று தெரிவில" என்று ஞானமார்க்கத்தின் நிலையையும் தெரிவித்துளார் கம்பர்பிரான்.

ஆதலின், சிலேடையைக் கையாளுங்கால் இக்கவி சொல்நயம் சிறப்பதன்றி உயர்ந்த தத்துவங்களையே பெரும்பான்மை விளக்கும் மேன்மையர் என்பது ஈண்டுக் கூறியவைகளால் தெரிதலாகும்.

T. N. சேஷாசலம்.

# தமிழ்ப் பாடம் 47.

## நளவெண்பா

(909-வது பக்கத் தொடர்ச்சி)

### கலிதொடர் காண்டம்.

அடையுங் கடுங்கானி லாடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே யோகோ—விடையெனக்குத்
தந்தருள்வா யென்னுத்தன் றாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியா டேர்ந்து 122.

பதப்பிரிவு:—அடையும் கடும் கானில் ஆடு அரவின் வாய்ப்பட்டு உடையும் உயிர் நாயகனே ஓகோ விடை எனக்கு தந்து அருள்வாய் என்னுதன் தாமரை கை கூப்பினாள் செம் துவர் வாய் மெல் மொழியாள் தேர்ந்து.

அன்வயம்:—செம் துவர்வாய் மெல்மொழியாள், தேர்ந்து, கடும் கானில் அடையும் ஆடு அரவின் வாய்ப் பட்டு நாயகனே, உயிர் உடையும். ஓகோ! எனக்கு விடை தந்து அருள்வாய்" என்னுத் தன் தாமரைக் கைனள்.

பதவுரை

செம் - சிவந்த
துவர் - பவளம்போன்ற
வாய் - வாயில்
மெல் - மெல்லிய



மொழியாள் - மொழிகளை இயம்புகின்ற தமயந்தி
தேர்ந்து - (இனித் தான் தப்புவதில்லை யென்
    பதை) உணர்ந்து,
"கடு - கடுமையாகிய
கானில் - காட்டில்
அடையும் - சேர்ந்த
ஆடு - ஆடுகின்ற
அரவின் - பாம்பின்
வாய் - வாயில்
பட்டு - அகப்பட்டு,
நாயகனே - தலைவா,
உயிர் - (எனது) உயிர்
உடையும் - (இனி) விண்டுபோகும்.
ஓகோ - ஐயோ
எனக்கு - எனக்கு
விடை - செலவு
தந்து - கொடுத்து
அருள்வாய் - அருள்வாய்,"
என்னு - என்று
தன் - தன்னுடைய
தாமரை - தாமரைமலர் போன்ற
கை - கரங்களை
கூப்பினாள் - குவித்துக் கும்பிட்டாள்.

விரிவுரை:—நாயகன் உத்தரவு இல்லாமல் ஒன்றும் செய்யப்படாது என்னும் கொள்கையள்போல், சாவதற்கும் அவன்பால் செலவு பெற்றுக்கொள்கின்றனள் தமயந்தி. பாம்பின் வாயில் பாதிஉடல் முழுகநின்று தன் கொழுநன் அகன்ற திசைநோக்கிக் கும்பிடும் இப்பதிவிரதையை நினைத்தாலும் நற்கதி பெறலாம். அதலால் தான் இப்பத்தினித் தெய்வம் போன்றவளின் முகத்தை அடுத்த செய்யுளில் புகழேந்திப்புலவர் 'தெய்வமுகம்' என்று அழைக்கின்றார். தங்கத்தைத் தீயிலிட்டால் அது மேன்மேலும் ஒளிர்வதைப்போல் தமயந்தியும் துன்பத்தால் தெய்வமென விளங்குகின்றாள்.

உண்டோ ரழுகுரலென் றொற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயில்
முழுகுவா டெய்வ முகம். 123

பதப்பிரிவு:-உண்டு ஓர் அழு குரல் என்று ஒற்றி வருகின்ற வெண் தோடன் செம் பங்கி வில் வேடன் கண்டான் கழுகு வாழ் கானகத்து கார் அரவின் வாயில் முழுகுவாள் தெய்வ முகம்.

அன்வயம்:—ஓர் அழுகுரல் உண்டு என்று ஒற்றிவருகின்ற வெண்தோடன் செம்பங்கி வில்வேடன், கழுகு வாழ் கானகத்து கார் அரவின் வாயில் முழுகுவாள் தெய்வ முகம், கண்டான்.

பதவுரை.

ஓர் - ஒரு
அழு - அழுகின்ற
குரல் - குரல்
உண்டு - உளது
என்று - என்று (உணர்ந்து)
ஒற்றி - வேவு பார்த்து
வருகின்ற - வருகின்றவனாகிய
வெண் - வெண் சங்கு
தோடன் - காதணிகளை அணிந்தவனும்
செம் - சிவந்த
பங்கி - தலைமயிரைஉடையவனுமாகிய (ஒரு)
வில் - வில்லை ஏந்திய
வேடன் - வேடனானவன்,
கழுகு - கழுகுகள்
வாழ் - வசிக்கின்ற
கானகத்து - அந்தக் காட்டில்
கார் - கரிய
அரவின் - பாம்பினுடைய
வாயில் - வாயில்
முழுகுவாள் - அமிழ்கின்ற தமயந்தியின்
தெய்வ - தெய்வத்தன்மை பொலியும்
முகம் - முகத்தை
கண்டான் - பார்த்தான்.

வெய்ய வரவின் விடவாயினுட் பட்டேன்
ஐயன்மீ ருங்கட் கபயம்யான்—உய்ய
அருளீரோ வென்னு வரற்றினா ளஞ்சி
இருளீரும் பூணா ளெடுத்து. 124.

பதப்பிரிவு:—வெய்ய அரவின் விடம் வாயின்உள் பட்டேன் ஐயன்மீர் உங்கட்கு அபயம் யான் உய்ய அருளீரோ என்னு அரற்றினாள் அஞ்சி இருள் ஈரும் பூணாள் எடுத்து,

பதவுரை

இருள் - இருளை
ஈரும் - பிளக்கின்ற
பூணாள் - (பிரகாசம் பொருந்திய)
    ஆபரணங்களையுடைய தமயந்தி,
    (அவ்வேடனைப் பார்த்து)
வெய்ய - கொடிய
அரவின் - பாம்பின்
விடம - விஷமுடைய
வாயினுள் - வாயில்
பட்டேன் - அகப்பட்டேன்,
ஐயன்மீர் - எனது தமையன்மார் போல்வீரே,
யான் - நான்
உங்கட்கு - உங்களுக்கு
அபயம் - அடைக்கலம்,
உய்ய - யான் பிழைக்கும்படி
அருளீரோ - அருள்செய்ய மாட்டீரோ,
என்னு - என்று
அஞ்சி - பயந்து
எடுத்து - வாய்விட்டு
அரற்றினாள் - கதறினாள்.

விரிவுரை:—இந்தச் செய்யுளில் 'அஞ்சி' என்னும் சொல் மற்ற வார்த்தைகளோடு பட்டதும் படாததுமாய் நிற்கின்றது. அதுபோலவே, வேடனைத் தமயந்தி வேண்டும்போது ஒரு அச்சம் அவள் மனதில் இடையே சிறிது தோன்றி இருத்தலுங்கூடும். செம்பங்கிச் சிலை வேடன் தோற்றத்தி லிருந்து, "பாம்பினால் சாகாமல் இவன் என்னைக் காத்தாலும் பின் யாது செய்வானோ" என்று அஞ்சினள்போலும். ஆதலாலோ, அவள் அவனை "என்தமையன் போன்றவனே" என்றழைத்தது! பின் நிகழ்ந்ததைப் பார்க்குங்கால் இவளுற்றபயமும் பொய்க்க வில்லை. இவள்மேல் அவ்வேடன் மோகங் கொண்டான் என்பது இரண்டு பாசுரங்களுக்கப்பால் தெரியும். ஆயினும், தர்ம சித்தமுடைய ஒருத்தியும் தன்னைப்பார்த்த ஒருவன் மோகங்கொள்வான் என நினைக்கமாட்டாள். அது அவர்களுக்கு இயற்கையன்று. ஆதலால் அடாத பழிக்கு ஆளகத் தன்னை அழைப்பான் அவன் என்று அஞ்சினள் என நாம் மதிக்கப் படாது. பாலைநிலத்தில் சஞ்சரிக்கின்ற வேடர்கள் வழிபறிக்கும் தொழிலுடையவர்களாதலால் தானணிந்துள ஆபரணங்களைக் கவர்தற்குத் தன்னை நலிவானோ என்று அஞ்சினள் எனக் கொள்வதேமுறை.

'இருள் ஈரும் பூணுள்' என்றும் அவள் இங்குக் குறிக்கப் பெற்றுளாள்.

சங்க நிதிபோற் றருசந் திரன்சுவர்க்கி [வெம்
வெங்கலிவாய் நின்றுலக மீட்டாற்போல்-மங்கையை
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு. 125.

பொழிப்புரை:—பகையை வென்ற மூங்கிலினுல் அமைந்த வில்லையுடைய அவ்வேடன் தமயந்தியின் நிலையைக்கண்டு, சங்கநிதிபோல் கேட்டவர்களுக்குக் கேட்டதைத் கொடுக்கின்ற சந்திரன்சுவர்க்கி, கொடிய கஷ்டத்திலிருந்து இவ்வுலகத்தவர்களைத் தன் கொடையால் மீளும்படி செய்ததுபோலத் தமயந்தியைப் பாம்பினுடைய வாயிலிருந்து பறித்தான்.

விரிவுரை,—புகழேந்திப் புலவரை ஆதரித்த வள்ளல் மள்ளுவநாட்டரசனுகிய சந்திரன்சுவர்க்கி என்பதையும், அவனை இப்புலவர் பாராட்டுகின்றதையும் முன்னமே கூறிஇருக்கின்றோம். (6வது செய்யுள். 33வது பக்கம்). இவைகளைத் தொகுத்து அவைகளின் தன்மையையும் விளக்கி ஸ்ரீமான். டி. யன் சேஷாசலம் தன் கம்பராமாயணக் கட்டுரையில் முன் (812வது. பக்கத்தில்) வரைந்திருப்பவைகளை எடுத்துப் படித்துக் கொள்வது நலம். அடைமொழி ஒன்றும் வேண்டாவழி வருவிக்காமல் கதைக்கொட்டித் தொழிலின் தன்மையால் தம் வள்ளலாரை உவமையாக்கிப் பாராட்டுவதே சிறந்ததென்று அவர் அங்குக் கூறியுள்ளார்.

குறிப்பு :—'காம்பின் வாய் வில்,' என்பது 'காம்பினுல் வாய்ந்த வில்' எனவிரியும். ஆதலின் காம்பின், என்பது மூன்றும் வேற்றுமை. ஆல் ஆன் ஒடு ஓடு என்பவைகள் மூன்றும் வேற்றுமை உருபுகள். காம்பின் என்பதில் அவ்வுருபு ஒன்றும் இல்லாததால் அது மூன்றும் வேற்றுமைத் தொகை. காம்பு+இன்=காம்பின் என்று ஆனதில் இன் என்றது உருபன்று. அதுசாரியை. உருபுகளைச் சொல்லோடு சேர்த்துவைப்பதற்குச் சில சமயங்களில் நடுவே வருகின்ற இடைச் சொற்களுக்குச் சாரியை என்பது பெயர் என முன் (706-வது பக்கம்) காட்டி இருக்கின்றோம். காம்பு+இன்+ஆல்=காம்பினுல் என்று இருக்கவேண்டியது, பெயர்ச் சொல்லும் சாரியையும் மாத்திரம் நின்று உருபு மறைந்து 'காம்பின்' என வந்திருக்கின்றது.

மூன்றும் வேற்றுமை, பெயர்ச்சொல்லை மூன்றுவிதப் பொருள்களாக மாற்றுவதற்கு வரும். அவை, கருவி கர்த்தா உடனிகழ்ச்சி என்பன (728-வது, பக்கம்,) இனி, கருவிப் பொருள், முதற்கருவி துணைக்கருவி என இரண்டு பிரிவுகளை உடையது. அவ்வாறே கர்த்தாப் பொருளும், ஏவுதற் கர்த்தா இயற்றுதற் கர்த்தா, என இருவகைப்படும். கருவி என்பது ஒன்றைச் செய்வதற்கு வேண்டியிருப்பது. செய்யப்படும் பொருள் குடமானுல், அதைச் செய்வதற்கு முதலில் மண் என்னும் வஸ்துவேண்டும். ஆனுல் மண்மாத்திரம் இருந்தால் போதாது. சக்கரம் வனைதடி முதலிய சாதனங்களும் வேண்டும். இவ்விதம் செய்யப்படும் பொருளுக்கு முதல் வஸ்துவாக இருப்பதை முதற் கருவி என்றும், சாதனங்களாக இருப்பனவற்றைத் துணைக் கருவி என்றும் அழைப்பர். 'தச்சன் மரத்தினுல் பெட்டியைச் செய்தான்,' என்னும் உதாரணத்தில் பெட்டிக்கு முதற் கருவியா யிருப்பது மரம். அதனைக் காட்ட 'ஆல்' என்னும் மூன்றும் வேற்றுமை உருபு அதனேடு சேர்ந்திருக்கின்றது. எனவே, இது மூன்றும் வேற்றுமை முதற்கருவிப் பொருள். இப்படியே, "இது கல்லால் செய்த சிலை" என்னும்போதும் கல்லால், என்பது மூன்றும் வேற்றுமை முதற்கருவிப் பொருளில் நிற்கின்றது. அவ்வாறின்றி, 'உளியால் செய்த பெட்டி,' 'வாளால் அறுத்த மரம்,' என்னும் வாக்கியங்களில், உளியும் வாளும், பெட்டியைச் செய்வதற்கும் மரத்தை அறுப்பதற்கும் மூலமாயில்லாமல் உதவியாக மாத்திரம் இருப்பதால், மூன்றும் வேற்றுமை உருபுகள். அவைகளைத் துணைக்கருவிப் பொருள் படும்படி செய்தன.

'காம்பின் வாய் வில்', என்று இந்தச் செய்யுளில் வந்திருப்பதில், காம்பு என்னும் பெயர்ச் சொல்லால் குறிக்கப்படும் மூங்கில் வில்லைச் செய்வதற்கு மூலவஸ்துவாயிருப்பதால் அது முதற்கருவிப் பொருளில் நிற்கின்றது. இப்பொருளில் இருப்பதால், ஆல் ஆன் என்னும் உருபுகள் வெளிப்படையாக இல்லாமற்போனுலும் அச் சொல் மூன்றும் வேற்றுமை பெற்றிருக்கின்றதென்று சொல்லப்பட வேண்டும். முதற் கருவி துணைக் கருவி என்றும் கூறலாம், இதனையே முதற் காரணம் துணைக்காரணம் என்றும் கூறலாம்.

"இக்கோயில் தச்சனுல் கட்டப்பட்டது," என்பதற்கும், "இக்கோயில் அரசனுல் கட்டப்பட்டது" என்பதற்கும் உள்ள வித்தியாசம் வெளிப்படை. தச்சனும் அரசனும் கோயிலுக்கு முதற்கருவியு மல்லர் துணைக் கருவியுமல்லர். கல் முதலிய துணைக் கருவி, உளி முதலிய துணைக் கருவி. ஆகையால் அரசன் தச்சன் என்பவர் கல் முதலிய முதற்கருவிகளையும் உளி முதலிய துணைக்கருவிகளையுங் கொண்டு, கோயிலாகிய பொருளைச் செய்தவர். அவ்வாறு அவர்கள் கர்த்தா ஆவதை, ஆல் என்னும் உருபு சேர்ந்து காட்டுவதால் இங்கு மூன்றும் வேற்றுமை கர்த்தாப் பொருளில் வந்திருக்கின்றது. இனி, கோயிலைக் கட்டுவதில் அரசன் கட்டுவதற்கும் தச்சன் கட்டுவதற்கும் ஒரு வித்தியாசம் இருக்கின்றது தச்சன் தானே தன் கைகளால் கட்டுவான். அரசன் மற்றவர்களைக் கொண்டு கட்டுவிப்பான். இயற்றுபவன் தச்சன், இயற்றும்படி ஏவுபவன்; அரசன் ஆதலால் அரசனை ஏவுதற்கர்த்தா வென்றும், தச்சனை இயற்றுதற் கர்த்தா வென்றும் அழைப்பர்.

# வானசாஸ்திரம்.

(911-வது பக்கத் தொடர்ச்சி)

## நக்ஷத்திரங்கள்.

இதுவரையும் நாம் சூரியனையும் அதன் கீழ்பட்ட கிரகங்கள் உபக்கிரகங்கள் தூமகேதுக்கள் எரி நக்ஷத்திரங்கள் ஆகிய இவைகளைப்பற்றிச் சொல்லிவந்தோம். தற்கால வானசாஸ்திர ஆராய்ச்சி எழுவதற்குமுன் இவைகளைப் பற்றி மனிதருக்கு எட்டியிருந்த அறிவு மிகச் சொற்பமே. தூரதிருஷ்டி ஏற்பட்டபின் பூததத்துவ சாஸ்திரங்களின் உதவியால் நாம் இவைகளைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிற விஷயங்கள் அனேகம். இவ்விஷயங்களைச் சுருக்கமாக மேலே சொன்னேம்.

சூரியனையும் அதைச் சேர்ந்த கிரகங்களையும் தவிர வானில் எண்ணிறந்தசுடர்களை நாம்பார்க்கிறோம். இவைகளிற் சில மிகவும் பிரபையுள்ளவைகளாயும் மற்றவைகள் சிறு அக்கினிப்பொறிகள் போலவும் தோற்றப் படுகின்றன. இவ்விதம் நமதுவெறுங்கண்ணுக்குத்தோற்றுவன சிலவே. இவைகளைவிட தூரதிருஷ்டியின் மூலமாகத் தெரியும் நக்ஷத்திரங்கள் எத்தனையோலக்ஷம். தூரதிருஷ்டிக்கும் எட்டாதவைகள் எத்தனை இருக்குமோ வென்பது ஒருவராலும் சொல்ல முடியாது. இதுவரையும் கணக்கிட்ட நக்ஷத்திரங்களின்தொகை 500,000,00. சூரியனும், வானத்தில் தோற்றும் நக்ஷத்திரங்களில் ஒன்றுதான். ஆனுல் சூரியனைப் பார்கிலும் எத்தனையோ மடங்கு பெரிய நக்ஷத்திரங்களிருக்கின்றன. ஆகவே நாம் வசிக்கின்ற பூமியும் அதனேடு சேர்ந்திருக்கும் மற்றக் கிரகங்களும் இவைகளுக்கெல்லாம் தலைமை வகித்துள்ள சூரியனும் சிருஷ்டியில் ஒரு சிறுதுளி என்றே சொல்ல வேண்டும்.

ஆதிகாலம் தொட்டு மனிதர் வானிலுள்ள சுடர்களைக் கூட்டங் கூட்டமாக வகுத்து அவைகளுக்கு வெவ்வேறு பெயர்களிட்டு வந்திருக்கின்றனர். இக் கூட்டங்கள் நமது கண்ணுக்கு ஒரேமட்டத்திலிருப்பது போலத் தோற்றினுலும், உண்மையில் அவைகளுக்குள் ஒருவகையான சம்பந்தமுமில்லை. அந்தரவெளியில் பூமிக்கப்பால் வேறிடத்தில் நின்று ஆகாயத்தைப் பார்த்தால் இந்தக் கூட்டங்கள் பிரிந்து தோன்றும். பூமியிலிருந்து பார்க்கும்பொழுது இவைகள் எல்லாம் நிலைமாறாது ஒரே இடத்தில் இருக்கின்றனபோற் காணப்படுகின்றன. இதற்குக்காரணம்இவைகளுக்கும்பூமிக்குமிடையிலுள்ள தூரம் கணக்குக் கடங்காமலிருப்பதுவே. இவ்விதம் அசைவற்றனபோல் தோன்றும் நக்ஷத்திரங்களுக்கும் அசைவு இருக்கிறது. நக்ஷத்திரங்களின் அசைவு இருவகைப்படும். ஒன்று அவைகளுக்கே உரியது மற்றதுபூமிதன்பாதையில் சுற்றி வருகையில் 183,000,000 மைல் தூரம் நிலைபெயர்ந்து போகின்றது. தூரத்தில் நிலையாய் இருக்கும் ஒரு பொருளை நாம் வெவ்வேறு இடங்களில் நின்று பார்த்தால் அப்பொருள் முந்திய நிலையிலிருந்து சற்று விலகி இருப்பதாகத் தோன்றுகின்றது. இவ்விதம் விலகி இருக்கும் அளவைக்கொண்டு அந்தப் பொருளின் தூரத்தைக் கணிக்கலாம். அதுபோல நாம் சூரியனைச் சுற்றி வருகையில் ஒரு குறித்த நேரத்தில் ஒரு நக்ஷத்திரத்தைக் கவனித்து, ஆறுமாதத்திற்குப் பின் அதே நக்ஷத்திரத்தைக் கவனிக்கும் பொழுது நாம் முந்தியிருந்த விடத்திலிருந்து ஏறக்குறைய 190,000,000 மைலுக்கப்பால் இருக்கிறோம். இவ்வளவு தூரத்துக்கப்பாலிருந்து நாம் நக்ஷத்திரங்களிற்சிலவற்றைத் தூரதிருஷ்டியின்மூலமாய்க் கவனிக்கும்பொழுது அவைகள் சற்று விலகியிருப்பதாகத் தெரியும். இவ்விதம் இடம் பெயர்ந்து காணப்படும் நக்ஷத்திரங்கள் ஐம்பதுக்கு மேற்படா. இவ்விதம் நக்ஷத்திரங்கள் நிலைபெயர்ந்து காணப்படுகின்றன வென்பதும் 1838-ம் ஆண்டுமுதல் முதல் பெசெல் என்னும் வான சாஸ்திரியால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் காலத்துக்கு முன் நக்ஷத்திரங்களுக்கு அசைவுஇல்லைஎன்பதே கொள்கையாயிருந்தது. இவ்விதம் அசைவில்லாத நக்ஷத்திரக் கூட்டங்கள் மத்தியில் பூமி அசைவுள்ளதென்னும் கொள்கையை ஒப்புக்கொள்வது முடியாதிருந்தது. கப்பர்னிக்கஸ் சூரியனைச் சுற்றிப் பூமியும் கிரகங்களும் ஓடிக்கொண் டிருக்கின்றனவென்று முதன்முதல் சொன்னபோதிலும் அவருக்குப்பின்னுல் அனேக ஆண்டுகளாகியும், அனேகருக்கு இதன் உண்மை நம்பிக்கையில் தங்கியிருந்ததே யன்றி சந்தேகமற விளங்கவில்லை. இவ்விதம் நக்ஷத்திரங்கள் நிலைபெயருகின்றன வென்பது ஸ்தாபிக்கப்பட்டபின் இந்தச் சந்தேகமும் அறவே நிவர்த்தியாய் விட்டது என்று சொல்லலாம்.

இவ்விதம் நிலைபெயர்வது மிகவும் சிறு தூரமே இதிலிருந்து இவைகளின் தூரங்களைக் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தமுறை தவிர நக்ஷத்திரங்களின் தூரங்களை வேறுவழிகளிலும் கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்விதம் கணக்கிட்ட தூரங்களை மைல்கணக்கில் சொல்லமுடியாது. நக்ஷத்திரங்களில் தூரங்களைப்பற்றி சொல்லும் போது, வேறு அளவை கொண்டு சொல்லச் வேண்டியிருக்கிறது. ஒளி ஒரு செக்கண்டில் 186, 000 மைல் தூரம் செல்கின்றது. இவ்வளவு வேகமாய்செல்லுகின்ற ஒளி நமக்குக் கிட்டவிருக்கும் நக்ஷத்திரத்திலிருந்து பூமிக்கு வருகிறதற்கு $4\frac{1}{2}$ வருஷம் செல்லுகின்றது. இதிலிருந்து பூமிக்கு மிக்க சமீபத்தில் இருக்கிறதென்று சொல்லக்கூடிய நக்ஷத்திரத்தின் தூரத்தை யூகித்துக் கொள்ளலாம். நக்ஷத்திரங்களின் தூரத்தை அளப்பதற்கு அளவை 'ஒளிவருஷம்', அதாவது ஒரு நக்ஷத்திரம் எவ்வளவு தூரத்திலிருக்கிறதென்ற கேள்விக்கு இத்தனை ஒளிவருஷதூரத்தில் இருக்கிறது என்று சொல்லுவார்கள். நமக்கு மிக்க சமீபத்திலிருக்கும் நக்ஷத்திரம் $4\frac{1}{2}$ ஒளிவருஷத்துக் கப்பாலிருக்கிறது என்று சொன்னேம். அளவெடுத்தவைகளிற் சில 100 'ஒளி வருஷ'ங்களுக் கப்பாலுமிருக்கின்றன. இதற்கும் எவ்வளவோ தூரத்துக்கப்பால் அளவு கணிக்கப்படாத எத்தனை நக்ஷத்திரங்கள் இருக்கின்றனவென்பது சொல்லக் கூடியதன்று.

# ஆந்திர சர்வ கலாசாலை.

## பட்ட மளிப்பு விழா.

### ஆசிரியர் ஸி. வி. ராமன் பிரசங்கம்.

ஆந்திர சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் ஆசிரியர் ஸி. வி. ராமன் செய்த பிரசங்கத்தின் சாரமாவது:—

இவ்வருஷம் ஆந்திர சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பிரசங்கம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்கு நான் சந்தோஷ மடைகின்றேன். சமீபத்தில் இந்தியாவில் புதிய சர்வகலாசாலைகள் பல தோன்றி வருகின்றன. 1915-ம் வருஷத்திற்குப் பிறகு கவர்மெண்டின் அங்கீகாரம் பெற்று 13 புதிய சர்வகலாசாலைகள் தோன்றியிருக்கின்றன. முதலில், காசியில் ஒரு சர்வகலாசாலைஏற்பட்டது. கடைசியாகச்சிதம்பரத்திலொன்று ஏற்பட்டிருக்கிறது. பழைய சர்வகலாசாலைகளில் சில குறைகளிருப்பதாக அறிஞர் கருதவே புதிய சர்வகலாசாலைகள் தோன்ற ஆரம்பித்தன என்று நினைக்கவேண்டியிருக்கின்றது. இந்த உணர்ச்சிகொண்டே ஆந்திரப் பிரதேசத்திலும் ஒரு சர்வகலாசாலை ஏற்பட்டிருப்பதாக எண்ணுகின்றோம். ஆந்திரப் பிரதேசம் தமிழ் நாட்டிலிருந்து பிரிந்து விட்டாலும் ஆந்திரப் பிரதேசம் தனிப்பட்ட ஒரு பிரதேசமாயிருக்கவில்லை. சர்க்கார் பிரதேசம் ஒன்றும், ஸீடட்பிரதேசம் மற்றொன்றுமாக விருக்கிறது. தற்காலம் அவ்விரண்டு பிரதேசங்களும் பொதுவாக ஒரு சர்வகலாசாலையை வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டாலும், இரண்டு பிரதேசங்களின் நன்மைகளும் ஒரே விதமானவை யென்று சொல்ல முடியாது. தற்போது ஆந்திர சர்வகலாசாலையை ஸ்தாபித்த விஷயத்தில் ஒரு

குறையிருக்கின்றது. அதாவது இது விவேகக் கிளர்ச்சிக்கான உண்மையான மத்தியஸ்தானமன்று என்பதே. ஆந்திரப் பிரதேசத்தில் இப்போது 14 கல்லூரிகளிருந்தாலும், சர்வகலாசாலை காலேஜ் என்ற அந்தஸ்துக் குரியதாக ஒரு கல்லூரியும்இல்லை. இச்சர்வகலாசாலையை இனி நீங்கள் விருத்தி செய்ய வேண்டும். இதற்காக அஸ்திவாரம் போடும்போது ஜாக்கிரதையாகவே போட வேண்டும்.

வெளியிடத்துக் கலாசாலைகள் பலவற்றையும்இணைத்து வைக்கும் சர்வகலாசாலை முறையைப் போக்கி குருகுலவாச முறையில் சர்வகலாசாலை ஸ்தாபித்துவிட்டால் எல்லாக் குறைகளும் நீங்கிவிடுமெனப் பெரிய இடத்திலிருந்து சொல்லப் படுவதாகத் தெரிகிறது. இது முற்றிலும் எற்கக் கூடியதென்று எனக்குத் தோன்றவில்லை. குருகுலவாச முறையில் சர்வகலாசாலை என்று சொல்லிக்கொண்டு அதில் அறியாமையையும் வகுப்புவாதத்தையும் மதவெறியையும் வளர்த்து வருவதால் என்ன நல்ல பயன் விளையும்? தக்க ஆசிரியர்களும் கல்வியை கற்க ஆவலுள்ள மாணவர்களுமில்லாத சர்வகலாசாலை எதுவும் பயன்படாது. சர்வகலாசாலைக்கு அங்கமாகப் புத்தகசாலை, சரித்திர, ஆராய்ச்சிச்சாலை, மாணவர் விடுதி முதலியவைகள் அமைய வேண்டுமெனின் ஆசிரியர்களும் தகுதியுள்ளவர்களாக விருக்கவேண்டும். பெரிய கட்டிடங்களை மிகமுயன்று கட்டிவிட்டு அதற்கேற்றவாறு ஆசிரியர்களும் மாணவர்களும் அமையாவிடில் பயன் என்? ஆராய்ச்சியும் அறிவுமுதிர்ச்சியும் அதிகமுள்ளவர்களே ஆசிரியர்களாய் அமையவேண்டும். ஆந்திர பிரதேசத்தில் உண்மையான சர்வகலாசாலை வேலையை ஆரம்பிக்கத் தக்கதொரு மத்யஸ்தலம் தெரிந்தெடுப்பது உங்களின் அடுத்த வேலையாகவிருக்கிறது. ஆந்திரப் பிரதேச முழுமையையும் பார்த்ததில் வால்டேர்தான் அதற்குத் தகுதியான இடமென என் மனதில் தோன்றுகின்றது. சென்னைக்கும் கல்கத்தாவுக்கு மிடையில் அது இருப்பதால் வெளியிடங்களி லிருந்து தக்க ஆசிரியர்களைத் தருவித்துக்கொள்ளவும் வசதியாக விருக்கும். அதோடு அங்கு ஒருவைத்தியக் கலாசாலையும் இஞ்ஜினியரிங் பாடசாலையும் இண்டர்மீடியட் காலேஜுமிருக்கின்றன. வால்டேர் சீக்கிரத்தில் சிறந்ததொரு துறைமுகமாகி விடலாம்.

மேலும் சாஸ்திர விஷயத்திலும், தொழில் விஷயத்திலும் பாஷாஞானத்திலும் மாணவர்களுக்கு அறிவு பெருக எற்பாடு செய்யப்பட வேண்டும். இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் முன்வந்துசர்வகலாசாலைகளுக்குப் போதிய உதவி செய்ய வேண்டும். சர்வகலாசாலைப்படிப்பு, பட்டம் பெறுவதற்கும் அதனால் ஒரு உத்தியோகம் அடைவதற்காகவுமே எனப் பலர் நினைத்திருக்கின்றனர். சர்வ கலாசாலையில் படிப்பதெல்லாம் வாழ்க்கைநிலை உயர்ந்தோங்கும் அறிவுவிருத்திக்கே என எண்ண வேண்டும். சர்வகலாசாலையில் மாணவர் தாங்களாக ஒரு விஷயத்தைப்பற்றிச் சரியான முடிவுக்கு வரவும் நல்லொழுக்கம் அடையவும் கற்பிகக் வேண்டும். அதில்லாது கலாசாலை முடிந்து தம் வயிறுவளர்ப்பதோடு அமையும் கல்வியே மாணவர் பெறுவதானால் இவ்வளவு பணச் செலவும் ஆடம்பரமும் வியர்த்தமே யாகும்.

## ஸ்ரீ லஜபதிராய்

### சனியன்று காலஞ்சென்றார்.

பாஞ்சாலச் சிங்கமென்று இந்தியரால் போற்றப்படும் ஸ்ரீ லஜபதிராய் அவர்கள், இம்மாதம் 17-ந்தேதி காலை தமது இல்லத்தில் உயிர்நீத்தார். பஞ்சாப்பிற்குச் சைமன் கமிஷன் அங்கத்தினர் வந்தபோது, ஸ்ரீலஜபதி பகிஷ்கார இயக்கம் நடத்தினரென்று, வெள்ளைக்காரப் போலீஸ் உத்தியோகஸ்தர் அவரை அடித்தநாள் தொட்டு, அவரது தேகநிலை சரியாகவில்லை என்று தெரிகிறது. அன்று முதல் அவருக்கு அடிக்கடி மார்வலி வந்ததென்றும், பலஹீனம் ஏற்பட்ட தென்றும், சாவதற்கு முதல் நாள் உடம்பில் வலி எற்பட்டதென்றும், அவருக்குச் சிகிச்சைசெய்து வந்த டார்டர்கள் கூறுகின்றனர்.

**வாழ்க்கைச் சரிதம்.**

ஸ்ரீலஜபதிராய் 1865-ம் வருடம் பஞ்சாப்பில் லூதியானா ஜில்லாவிலுள்ள ஜாக்ரன்என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் அக்ரவாலர் என்னும் வைசியர் மறபைச் சேர்ந்தவர். இவரது பெற்றோர்கள் எழைகளேனும், அக்கிராமத்தார்களால் மிகவும் மதிக்கப்பட்டவர்கள். லஜபதியின் தந்தை லாலா ராதா கிருஷ்ணன் என்பவர், காங்கிரஸினிடம் அபிமானங் கொண்டவர். எழைகளினிடம் அனுதாபமும் கருணையுமுடையவர். தாயும் கல்வி அறிவு பெற்றவர். இத்தகைய பெற்றோர் வயிற்றில் பிறந்த பிள்ளை இவர்

வாசிக்கும் காலத்தில் லஜபதிராய் தமது புத்திசாலித்தனத்தைக் காட்டினார். லாகூர் அரசாங்கக் கல்லூரியில் உதவிப்பணம் பெற்றுப் படித்தார். 1883 வருஷம் சட்டப் பரீக்ஷையில் தேறினார். 1885-ம் வருஷம் மற்றொரு பரீக்ஷையில் தேறி வக்கீல் தொழிலுக்கு அருகர் என்ற சர்ட்டிபிகேட்டைப் பெற்று ஹிஸார் என்னும் ஊரில் வக்கீல் வேலை பார்த்தார்.

அச்சமயம் ஸ்ரீதயானந்த சரஸ்வதியின் ஆரிய சமாஜ இயக்கம் எங்கும் பரவிவந்தது. லஜபதிராய்க்கு இந்த இயக்கத்தினிடம் பற்று எற்பட அதில் சேர்ந்து உழைக்கத் தலைப்பட்டார். 1886-ம் வருஷம் லாகூரில் எற்பட்ட தயானந்தர் வேத ஆங்கிலப் பாடசாலையை ஸ்தாபிக்க லஜபதிராயர் உழைத்தது சிறிதல்ல.

லஜபதிக்குத் தமது தொழிலில் அதிக வருமானமும் பேரும் எற்பட்டது. ஹிஸாரை விடுத்து லாகூர் வந்து அங்கு வக்கீலாக அமர்ந்தார். லஜபதியின் அரசியல் வாழ்க்கை முதன் முதலாக லாகூரில் 1888 வருஷம் எற்பட்டது. 1897-ம் வருஷம் பஞ்சாப்பில் ஜனங்கள் பஞ்சத்தால் வருந்தியகாலை, லஜபதி கஷ்ட நிவாரண வேலையைப் பல நண்பர்களுடன் சேர்ந்து செய்தார். 1901-ம் வருஷம் அரசாங்கப் பஞ்சக் கமிட்டியில் சாக்ஷியும் கொடுத்தார்.

அப்பொழுது இந்தியாவில் படித்தவகுப்பினரிடம் அரசியல் உரிமை பெறும் எண்ணம் எற்பட்டிருந்தது. கோக்கலே இந்திய அரசியல் முன்னேற்ற வேலையை ஒட்டி 1905-ம்வருஷ இங்கிலாந்து செல்லுங்கால் ஸ்ரீலஜபதிராயரும் அவருடன் கூட இங்கிலாந்து சென்றார். அப்பொழுது அவர் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜரோப்பா முதலிய விடங்கள் சென்று அரசியல் நிலையையும், ஜனங்களின் நிலையையும் பார்த்தும், இந்தியாவைப்பற்றிப் பிரசங்கம் செய்தும் சுற்றுப் பிராயாணம் செய்தார்.

அவர் திரும்பியதும் இந்தியாவில் சுதேசியம் பலமாய் இருந்தது. லஜபதி அயல்நாட்டுப் பகிஷ்கார வேலையில் புகுந்து வேலைசெய்தார். இவர் திலகர் கட்சியைச்சேர்ந்தவர். இவரது பேச்சும் எழுத்தும் அரசாங்கத்தாருக்குப் பிடிக்கவில்லை. 1917-ம் அரசாங்கத்தார் இவரை தேசப் பிரஷ்டம் செய்தனர். அக்காலை அமெரிக்காவில் வாழ்ந்துவந்தார். பிறகு 1920-ம் வருஷந்தான் லஜபதி இந்தியா திரும்பினார். இவரதுபுகழ் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், இத்தாலியா முதலிய விடங்களில் பரவியுள்ளது.

லஜபதிராய் தளராத நெஞ்சமுடையவர். தமக்குச் சரியெனத் தோன்றுவதை எந்த இடையூறுவரினும் சலியாது செய்துமுடிப்பவர். எழைகளிடத்தில் கருணையுடையவர். இவ்வளவு பெரியவர் இச்சமயம் இறந்தது இந்தியாவிற்குப் பெரு நஷ்டமென்று பிரமுகர் பலர் கருதி வருந்துகின்றனர்.



வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கிவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றிய

**கந்தபுராண வெண்பா**

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், **கலா நிலயம்,**
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

**முருகன், ஓர் உழவன்.**

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

**நாவல் நூலிற்கு**

கிருஷ்ண குமாரி
என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,
**கலா நிலயம்,**
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

**அமிர்த குணபோதினி**

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

**வியாஸங்கள்.**

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| அன்பு | 0 | 1 | பொதுமதம் | 0 | 2 |
| பலவகை மனிதர் | 0 | 1 | ஆறுதாரம் | 0 | 2 |
| தவம் | 0 | 1 | சந்தேகம் | 0 | 2 |
| பொறுமை | 0 | 1 | கற்பு | 0 | 3 |
| இருவினை | 0 | 2 | அஸ்தபூஷணம் | 0 | 4 |
| இல்லறம் | 0 | 2 | பதினாறுபேறு | 0 | 4 |
| ஆலயவழிபாடு | 0 | 2 | என் தந்தையார் | 0 | 6 |

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

**நவீனகதா புத்தகசாலை,**
மங்கமாரி வீதி, இரங்கூன்

## கம்பராமாயணம்
## பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது, செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

## ஏமாங்கதத்
## திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

# KAMBAN'S KOSALA
or
# A Poet's Plea for Culture
## by T. N. Seshachalam B.A., B.L., In English

**A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.**

## With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.




# வர்த்தமானம்.

அறிக்கை :—ரங்கூனிலிருந்தும், மாண்டலேயி லிருந்தும், நமது சந்தாநேயர்கள், சிலர் பத்திரிகை யின் 42 இதழ் வந்துசேர வில்லை என்று எழுதி யுள்ளனர். ஏதோ தவறுதல் ஏற்பட்டுள்ளதுபோல் தோன்றுகிறது. இதுவரை 42 இதழ் பெருத நண் பர்களை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

***

ஆந்திர மஹாநாடு:—நந்தியால் என்னுமிடத்தில் ஆந்திரதேச மஹாநாடு ஸ்ரீமான் டி. பிரகாசத்தின் தலை மையிற் கூடிற்று. இம்மஹாநாட்டில் டில்லி சர்வ இந் தியாகாங்கிரஸ் கமிட்டியின் முடிவு ஏற்கப்பட்டது. எனி னும் முழுவிடுதலையே இந்தியாவின் நோக்கம் என்பது வற்புறுத்தப்பட்டது. ஸ்ரீலஜபதிராயின் மரணத்தைக் குறித்து ஒரு அனுதாபத் தீர்மானமும் செய்யப்பட்டது. கடைசியில் ஸ்ரீமான் டி. பிரகாசம், முடிவுரையில்லஜபதி யின் மரணம் முழுவிடுதலையை உறுதிசெய்துவிட்டது, என்றும் லஜபதி கூறியதுபோல் அஹிம்ஸைதர்மத் திற்கும் வரம்புஉண்டென்றும், சுயமதிப்பைக் காப்பாற் றிக்கொள்ளவும் சுயஆட்சிபெறவும் அஹிம்ஸைக் கொள் கையை விட்டுவிட நேரலாம் என்றும் கூறினர். பிறகு மஹா நாடு கலைந்தது.

***

இங்கிலாந்தில் புயல்:—சென்ற வாரத்தில் இங்கி லாந்தின் பல பாகங்களில் பெரும்புயல் அடித்தது இத் தகைய கடும்புயல் சமீபத்தில் எங்கும் அடித்ததில்லையாம். 200 டெலிபோன் மரங்கள் முறிந்து சாய்ந்தன. லண்டனில் பல வீடுகள் கூரையிழந்து நிற்கின்றன. லார்டு சபையின் வாயிலில் இருக்கும் முதலாவது ரிச் சர்ட் மன்னனின் கத்தியும் காற்றால் முறிந்துபோய் விட்டது. இயூஸ்டன் ஸ்டேஷன் இடிந்துபோய் விட் டது. புயலின்வேகம் மணிக்கு 60 மைல் என்று கூறப் படுகிறது. சவுத்தாம்டனில் சில வீடுகளும், சாப்பாட் டுக்கிளப்பும் பாழாயின. சிறு படகுகள் பல கவிழ்ந்து போயின. உயிர்ச்சேதம் அதிகமில்லை. ஆனால் ஜனங் களுக்கு நஷ்டமும் கஷ்டமும் அதிகம் என்று தெரி கிறது, என்று நவம்பர் 16-ந்தேதி வந்த தந்திச்செய்தி கூறுகிறது.

***

கலாநிலயம் கலைக்கழக விழா:—ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இராயப்பேட்டையிலிருக்கும் கலா நிலய இரவுப் பாடசாலையில் கலைமகள்விழாக் கொண்டா டப்பட்டது. மாணவர்கள், ஒட்டக்கூத்தரும் புகழேந்தி யும்' என்னும் நாடகத்தை நடித்துக் காட்டினர். பின்னர் தலைவர் ஸ்ரீமான் டி. யன். சேஷாசலமையர், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரை உபந்நியசிக்கும்படி வேண் டினார்.

முதலியார் அவர்கள் மாந்தரை விலங்கினின்றும் பிரிப்பது கல்வியென்றும், கல்வியுள்ள விடத்தில் அமைதியும் சுவையும் நிறைந்திருக்கும் என்றும், கல்வி பெண்மைக்குணமென்றும், ஆதலின் ஆன்றோர்கள்கலைக் கடவுளைப் பெண்ணுருவாக்கினர் என்றும் கூறினர். பின் னர், காவியங்களைக் கொளுத்தும் இயக்கமொன்று இது போது அறிவிலாச்சிலரால் நடத்தப்படுகின்றதுஎன்றும், அறிந்தோர் காவியங்களைக் காப்பது கடனென்றும் வற் புறுத்தினர். பிறகு, ஸ்ரீமான் சேஷாசலமையர் அவர்கள் பேருக்கும் புகழுக்கும் ஆசைப்படாது, ஆங்கிலம் படித் தார் தமிழைப் பரிகசிக்கும் இந்நாளில் தமிழின் இன் பத்தை எல்லோர்க்கும் ஊட்டி வருவது போற்றத்தக் கது என்றும் பாராட்டினர்.

ஸ்ரீ ஐயர் அவர்கள் 'முதலியார் கூறியபடி தமிழ்க் கலைக்குப் பகைவர் இருக்கின்றனர். நேரான பகைவர்கள் ஒருபுறமிருக்க, தமிழ்வளர்ச்சி என்று சொல்லித் தமிழில் அல்ஜிப்ரா, ஜியாமெட்ரி விரும்பும் நண்பர்களேதான் தமிழிற்கு விரோதிகள்' என்று கூறினர்.

முடிவில் மங்கலம் குப்புசாமி முதலியார், தான் இந்தப் பாடசாலையில் 15-ஆண்டுகளுக்குமுன் படித்தவர்என்றும் தனக்குத் தமிழ்ச்சுவை ஊட்டித் தன்னை உயர்த்தியவர் ஐயர் அவர்களே என்றும், இன்னும் இப்பள்ளியில் சேராதார் உடனே சேர்ந்து படிக்கவேண்டு மென்றும் கூறி உபந்நியாசகருக்கும் தலைவருக்கும் வந்தனம் கூறி னர்.

பிறகு பழம், பாக்கு வெற்றிலை வழங்க இரவு 9மணிக் குக் கூட்டம் கலைந்தது. மாணவர்கள் மிகுந்த ஊக்கத் தோடு இவ்விழாவை நடத்தியதைக் காண மகிழ்கின் றோம்.

***

கடற்கரைக் கூட்டம்:—ஸ்ரீ லஜபதிராயின் மரணத் தைக் குறித்து ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குச் சென்னைக் கடற்கரையில் கூடியதுபோன்ற பெருங் கூட்டம் சமீபகாலத்தில் கூடியதில்லை. சென்னை யிலுள்ள எல்லாக் கட்சியினரும் டாக்டர் அன்ஸாரி யும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். ஸ்ரீமான் குழந்தை ஸ்ரீமான் எஸ். ஸீநிவாஸ ஐயங்காரைத் தலைமை வகிக்கு மாறு கேட்டுக்கோள்ளக் கரகோஷத்திற்கு இடையில் அக்ராசனராய் அமர்ந்தார். அவர் கூறியதாவது:—

"இரண்டுவாரத்திற்குமுன் ஸ்ரீ லஜபதிராயை நான் டில்லியில் சந்தித்தகாலை அவர் இறந்துபோவார் என்று கனவிலும் கருதவில்லை. அரசியல் கொள்கையில் எனக்கும் அவருக்கும் வேற்றுமை உளது எனினும், அவ ரிடம் எனக்கு மதிப்புண்டு. அவரது மரணம் தேசத் திற்குப் பெருநஷ்டம். எனக்கும் அவருக்கும் சுயேச்சை விஷயமாய் ஏற்பட்ட தகவல் எனது வருத்தத்தை அதி கப்படுத்துகிறது. சுயராஜ்யம் என்று ஜனங்கள் சொல்ல வும் அஞ்சியகாலை ஸ்ரீ லஜபதி சுயராஜ்ய வேலை செய்து அரசாங்கத்தின் கோபத்திற்குப் பாத்திரமானர். பஞ்சாப் பின் சரித்திரம் லஜபதியின் சரித்திரம். தீண்டாமைக்கும் எளியவர் முன்னேற்றத்திற்கும் அவர் செய்துள்ளது சிறிதல்ல. இந்நாட்டுச் சிறுவர்கள் லஜபதியின் அடிச் சுவடுபற்றித் தொண்டுசெய்வதே அவர் கடமை.

தலைவர் முன்னுரை முடிய, டாக்டர் அன்ஸாரி சென்னை வாசிகள் லாலா லஜபதியின் மரணத்தை அறிய வருந்துவதாகவும், அவரது குடும்பத்தாரிடம் அனுதாபம் காட்டுவதாகவும் ஒரு தீர்மானத்தைப் பிரே ரேபித்துக் கூறியதாவது:—

லாலாஜியின் மரணம் எனக்கும் நாட்டிற்கும் பெரு நஷ்டம். அவர், நாட்டின் நலத்திற்கும், வகுப்பு ஒற்று மைக்கும் இந்து முகமதியர் நலத்திற்கும் அதிகம் உழைத்துவந்தார். முகமதியர் சிலர் அவர் முகமதியர் நலத்திற்கு விரோதமானவர் என்று கருதினர். அது தவறு. அவருடன் இந்து முகமதிய ஒற்றுமை பஞ்சா யத்தில் ஒற்றுமையை நாடி, நான் முகமதியர் சார்பாகக் கேட்டதெல்லாவற்றையும் ஒத்துக்கொண்டார் என் பதை அறிவிக்க விரும்புகிறேன். அவரைப்போன்ற ஒரு வர் கிடைப்பது அருமையே.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் கூறியதாவது:—வய திலும், அனுபவத்திலும் சிறந்த இப்பெரியார் மரணம் பெரிய நஷ்டமாகும். காங்கிரஸ் தலைவராக மிதவாதிகள் டாக்டர் ராஷ்பிஹாரி கோஷை நியமிக்க முயன்ற அந் நாளில், ஆழ்ந்த அறிவிலும், மனிதன் இயல்பை எளி தில் அறியும் திறனும் பெற்ற திலகர் பெருமானர் லஜ பதியைத் தலைவர் ஸ்தானத்திற்குத் தெரிந்தெடுத்தார் என்றால் லஜபதியின் சிறப்பு எத்தன்மையது என்பதை அறிதல் அரிதோ. இப்பெரியாரை வயதையும் அந்தஸ் தையும் பாராது போலீஸ்காரன் அடித்தான். அந்த அடியே அவரது சாவிற்குக் காரணம் என்பதை அறிய ஆங்கிலேயர்கள் தலைசாய வேண்டாவோ? வீரனாய் வாழ்ந்து, வீரனாய் இறந்தார் பஞ்சாப்பின் பெருந்தலைவர்.

பின்னர் யாகுப்ஹாஸனும் மற்றவர்களும் முறையே லஜபதியின் தேசசேவையைப் புகழ்ந்து பேசினர். பிறகு கூட்டம் கலைந்தது.

189030

# THOUGHTS FOR STATESMEN

from

## MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

**T. N. SESHACHALAM B.A., B.L.**

WITH A FOREWORD

by

**Sriman S. Sreenivasa Aiyangar**

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

**11, Vellala Street, Purasawalkum, Madras.**



### A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM**

OF

**CEYLON CIVIL SERVICE**

WITH AN APPRECIATIVE

**FOREWORD**

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

***MANAGER:—***

## "*KALANILAYAM*"

***11, VELLALA STREET.***

**Purasawalkam, MADRAS.**


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)